Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

WEDNESDAY, DECEMBER 07, 2022

புதன்கிழமை டிசெம்பர் 07, 2022 | ஒளி: 08 கதிர்: 159 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

மின் கட்டணத்தை அதிகரிக்காவிடின்

# முழுநாடும் இருளில் மூழ்கும்

## அமைச்சர் காஞ்சன சபையில் அறிவிப்பு

■ பா.நிரோஸ்



மின் கட்டணத்தை அதிகரிக்காவிட்டால் அடுத்த வருடத்தில் 6 அல்லது 8 மணித்தியாலங்கள் மின் துண்டிப்பை அமல்படுத்த வேண்டி ஏற்படும் என்று தெரிவித்த மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, இலங்கை மின்சார சபை மாதாந்தம் 423 பில்லியன் ரூபாயை வருமானத்துக்கு மேலதிகமாக செலவிடுகிறது என்றும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று (06), மின் கட்டணம் குறித்த விசேட அறிவித்தலை விடுத்து தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்.

தொடர்ச்சி P2

# 60 வயதில் கட்டாய ஓய்வு; வர்த்தமானி வெளியானது

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமலாகும் வகையில், அனைத்து அரச ஊழியர்களும் 60 வயதில் கட்டாயம் சேவையிலிருந்து ஓய்வு பெற வேண்டும் என்ற கட்டளை அதிவிசேட வர்த்தமானியூடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

இரட்டைக் குடியுரிமை கொண்ட

# எம்.பி குறித்து ஆராயப்படும்

இரட்டைக் குடியுரிமை கொண்ட எம்.பியொருவர் பாராளுமன்றத்தில் இருப்பதாக வெளியாகியுள்ள தகவல் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பாராளுமன்றத்தில் நேற்று (06) தெரிவித்தார். எதிர்க்கட்சி எம்.பியான சமிந்த விஜேசிறி முன்வைத்த கருத்தொன்றுக்கு பதிலளிக்கையிலேயே சபாநாயகர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

# மைத்திரியின் மனு குறித்து ஜனவரி 17 அன்று விசாரணை

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில், தனக்கு எதிரான நீதவான் விசாரணை மற்றும் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டதை சவாலுக்கு உட்படுத்தி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்த ரிட் மனு மீதான விசாரணைக்கான தினமாக ஜனவரி 17ஆம் திகதியை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிர்ணயித்தது. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா, தம்மிக்க கணேபொல ஆகிய இருவர் அடங்கிய அமர்வு முன்னிலையில் மனு நேற்று (06) பரிசீலிக்கப்பட்ட போதே திகதி நிர்ணயிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள


# ஒருங்கிணைந்த உதவி இலங்கைக்கு அவசியம்

இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு பல்தரப்பு நிதி நிறுவனங்களின் ஒருங்கிணைந்த உதவித் திட்டம் இலங்கைக்கு அவசியமென சர்வதேச நிதி நிறுவனங்களின் தலைவர்கள் தீர்மானம் மேற்கொண்டுள்ளனர். உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகளே மேற்படி தீர்மானத்திற்கு வந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# சிவனொளிபாதமலை யாத்திரை ஆரம்பம்





2022-2023 ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாதமலை பருவ யாத்திரை, பூரண தினமான இன்று (07) புதன்கிழமையுடன் ஆரம்பமாகும். பெல்மதுளை, கல்பொத்தாவெல சிவனொளிபாதமலை விஹாரையில் இருந்து புனித தந்த தாது பெரஹெர மூலம் சிவனொளிபாதமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

தொடர்ச்சி P2

# வசந்த, சிறிதம்ம தேரர் பிணையில் விடுவிப்பு

பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான பிக்கு சம்மேளனத்தின் அழைப்பாளர் கல்வெவ சிறிதம்ம தேரர் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே ஆகியோரை கடுவெல நீதவான் சாமிகா விஜேபண்டார, நேற்று (06) பிணையில் விடுவித்தார். ஆர்ப்பாட்டம் ஒன்றின் போது, பத்தரமுல்லையில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் பிரதான வாயில் சேதப்படுத்தப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் இருவருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரித்தானிய உயர்ஸ்தானிகர், ஜப்பானிய தூதுவர், அமெரிக்க தூதுவர், இந்திய உயர்ஸ்தானிகர், அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் ஆகியோரை கொழும்பில் நேற்று (06) சந்தித்து, இருதரப்பு அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பான கருத்துகளை பரிமாறிக்கொண்டார்.

# 13ஐ பலப்படுத்துவதே ஆரம்பத் தீர்வு

## மெல்வதற்கு அவல் கொடுக்க கூடாது என்கிறார் டக்ளஸ்

■ பா.நிரோஸ்



13 ஆவது திருத்தத்தினை பலப்படுத்தி அதனை முன்னெடுப்பதையே எமது மக்களின் அரசியல் ரீதியான பிரச்சினைக்கு ஓர் ஆரம்பத் தீர்வாகக் கருதுகிறோம் என்றும் அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளுமாறு இனவாதிகளும் சொல்வதற்குரிய சூழலை ஏற்படுத்த வேண்டுமே தவிர, இனவாத சக்திகளுக்கு மெல்வதற்கு அவலை கொடுக்க கூடாது என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுத்தியுள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று (06) இடம்பெற்ற கடற்றொழில் அமைச்சு தொடர்பான வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2

தேர்தலை ஒத்திவைக்கும்

# சூழ்ச்சிகளுக்குள் சிக்கிவிடக் கூடாது

## சபாநாயகரிடம் கிரியெல்ல அறிவிப்பு

■ பா.நிரோஸ்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்கும் அரசாங்கத்தின் சூழ்ச்சிகளுக்குள் சபாநாயகர் சிக்கிவிடக் கூடாது என்று எதிர்க்கட்சி பிரதம கொரடாவும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியுமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். சபாநாயகரால் அரசியலமைப்பு சபை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று (06) வெளியிடப்பட்ட அறிவித்தலை தொடர்ந்தே, மேற்குறிப்பிட்ட கருத்தை முன்வைத்தார்.

தொடர்ச்சி P2

# பாராளுமன்றத்தின் ஊடாக மாத்திரம் தீர்வு காணமுடியாது

■ பா.நிரோஸ்

அனைத்து பிரச்சினைகளுக்கும் பாராளுமன்றத்தின் ஊடாக மாத்திரம் தீர்வு காண முடியாது. ஆகவே, மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண, மாவட்ட மட்டத்தில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. வினோநோக ராதலிங்கம் தெரிவித்தார். 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் விவசாயம், நீர்பாசனம், கடற்றொழில் ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதம் பாராளுமன்றத்தில் நேற்று (06) இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

# இலங்கையை காப்பாற்ற அனைவரும் இணைவர்

## நாடுகள், நிதி நிறுவனங்கள் மீது சீனா நம்பிக்கை



இலங்கையின் தற்போதைய நெருக்கடியை சமாளிக்கவும், அதன் கடன் சுமையை குறைக்கவும், நிலையான வளர்ச்சியை அடையவும் சம்பந்தப்பட்ட நாடுகளும் சர்வதேச நிதி நிறுவனங்களும் சீனாவுடன் இணைந்து செயற்படும் என்றும் சீனா நம்புவதாக அந்நாட்டின் உத்தியோகபூர்வ அரச செய்தி நிறுவனமான 'சின்ஹுவா' தெரிவித்துள்ளது. இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கான கடன் மறுசீரமைப்பு தொடர்பான விரைவான முன்னேற்றம் குறித்து ஆலோசிப்பதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று இந்த வாரம் சீனாவுக்குச் செல்லவுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

தொடர்ச்சி P2

சிறுநீரக கடத்தல் விவகாரம்

# பணிப்பாளர்களுக்கு பயணத்தடை

## சந்தேகநபருக்கு அடையாள அணிவகுப்பு

சிறுநீரக கடத்தலின் பிரதான சந்தேகநபரை அடையாளம் காண்பதற்காக அணிவகுப்பில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிட்ட கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரிய, குறித்த வைத்தியசாலை பணிப்பாளர் சபையைச் சேர்ந்த அறுவருக்கு வெளிநாட்டு பயணத்தடை விதித்து உத்தரவிட்டார். சிறுநீரகக் கடத்தலுடன் தொடர்புடைய கொழும்பு-15, கஜீமா வத்தை பகுதியைச் சேர்ந்த 41 வயதான தரகர் ஒருவர், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

கடந்த வருடத்தில்

# 349 பட்டதாரிகள் சிறையில் அடைப்பு

கடந்த வருடத்தில் மாத்திரம் 14,547 சிறைக் கைதிகளும், 62,426 சந்தேக நபர்களும் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள சிறைச்சாலைகள் திணைக்களம், அதில் 349 பட்டதாரிகளும் உள்ளடங்குவதாக சுட்டிக்காட்டியுள்ளது.

நீதிமன்றங்களால் தண்டனை விதிக்கப்பட்ட அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் படிப்படியாக அதிகரித்துள்ளதாக திணைக்களத்தின் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# முழுநாடும் இருளில் மூழ்கும்

“கடந்த தினங்களாக எதிர்க்கட்சியினரும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவும் மக்களை தவறாக வழிநடத்தும் வகையில் கருத்துகளை வெளியிட்டுள்ளனர். மின்சார சபை எதிர்கொண்டுள்ள நட்டத்தை ஈடு செய்வதற்காக கட்டணத்தில் திருத்தம் செய்வது தொடர்பில் எவ்வித பரிந்துரைகளும் அமைச்சரவைக்கு முன்வைக்கப்படவில்லை.

தற்போதைய நெருக்கடி நிலைமையை கருத்திற்கொண்டே மின்கட்டண திருத்தம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டுக்கான மின்னுற்பத்திக்கான மொத்த செலவை இலங்கை மின்சார சபை மதிப்பீடு செய்து அது தொடர்பான அறிக்கையை அமைச்சுக்கு சமர்ப்பித்துள்ளது.

நீர்மின் மற்றும் எரிபொருள் ஊடான மின்சார உற்பத்தி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தற்போது மின்துண்டிப்பு அமல்படுத்தப்படுகிறது. தற்போதைய நிலைமையில் மின் அலகு ஒன்றுக்காக 56.90 ரூபாய் செலவாகின்றது.

இந்நிலையில் தற்போது மின் அலகு ஒன்றுக்காக 56.90 ரூபாய் செலவாகின்ற போதும், மக்களிடமிருந்து 29.14 ரூபாய் அறவிடப்படுகிறது. இலங்கை மின்சார சபை மாதாந்தம் 423 பில்லியன் ரூபாயை வருமானத்தை காட்டிலும் மேலதிகமாக செலவிடுகிறது. இந்தத் தொகையை வழங்க முடியாது என திறைச்சேரி குறிப்பிட்டுள்ளது.

மின்கட்டணத்தை அதிகரிக்கும் அமைச்சரவை யோசனை சட்டபூர்வமானது இல்லை என இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளமை பொருத்தமற்றது. சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமையவே மின்கட்டணம் திருத்தம் தொடர்பான யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது” என்றார்.

## மைத்திரியின் மனு குறித்து ஜனவரி 17அன்று விசாரணை

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாடு தொடர்பில், ஒக்டோபர் 14ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியது.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் செப்டெம்பர் மாதம் 16ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட நோட்டீஸ் உத்தரவை இரத்துச் செய்யுமாறு முன்னாள் ஜனாதிபதி தனது மனுவில் கோரியிருந்தார்.

இந்நிலையில், மைத்திரிக்கு எதிரான நீதவான் விசாரணைகளை 10 வாரங்களுக்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்து, ஒக்டோபர் 14ஆம் திகதியன்று மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஏற்கவியலாத சாட்சியங்கள் மற்றும் செவிவழிச் சாட்சியங்களை கருத்திற்கொண்டு நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான் நோட்டீஸ் பிறப்பித்துள்ளதாகவும் தனது விருப்புரிமை அதிகாரத்தை சரியாகப் பயன்படுத்த கோட்டை நீதவான் தவறிவிட்டார் என்றும் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு, கோட்டை நீதவான் நோட்டீஸ் பிறப்பிக்கும் முன்னர், தனியார் ஒருவரால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டின் சட்டத் தேவைகளை நீதித்துறைசார் ரீதியில் மதிப்பீடு செய்ய தவறியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் 298 ஆவது பிரிவின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி, அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ மற்றும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட ஜேசுராஜ் கணேசன் ஆகியோர், கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தனிப்பட்ட முறைப்பாடு ஒன்றை தாக்கல் செய்திருந்தனர்.

கொலை வரம்பில் வராத மரணம் விளைவிக்கும் குற்றத்துக்கு சமமான கவனமற்ற செயலை செய்து பலரின் உயிரிழப்பை ஏற்படுத்தியமைக்கு, தாக்குதல் தினத்தன்று பாதுகாப்பு அமைச்சராகவும், சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராகவும் செயற்பட்ட முன்னாள் ஜனாதிபதியே பொறுப்பு என்று மனுதாரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

## ஒருங்கிணைந்த உதவி இலங்கைக்கு அவசியம்

கொழும்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று (06) இடம்பெற்ற நீண்ட, வட்டமேசை கலந்துரையாடலின் பின்னர் அவர்கள் இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளனர்.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீண்டகால அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சியுடன் இணைந்ததான இலங்கையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை முன்வைத்தார்.

உலக வங்கியின் துணைத் தலைவர் மார்ட்டின் ரைசர், ஆசிய அபிவிருத்தி வங்கியின் துணைத் தலைவர் ஷிக்சின் சென், சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட அதிகாரி பீட்டர் ப்ருயர், ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி கலாநிதி. உர்ஜித் பட்டேல், பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்கள் மற்றும் பொருளாதார வல்லுநர்கள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## பாராளுமன்றத்தின் ஊடாக மாத்திரம் தீர்வு காண முடியாது

அதில் கலந்து கொண்டு உரையாற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது, “உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய காலத்தில் நடத்த வேண்டுமாக இருந்தாலும் அவசர அவசரமாக மக்கள் பிரதிநிதிகளினதும், மக்களின் விருப்பமில்லாமல், அதிகாரிகளின் விருப்பத்திற்கமைய எல்லை நிர்ணயம் செய்யப்படுவது உண்மையான நோக்கத்துக்கு அப்பாற்பட்டது” என்றார்.

அரச அதிகாரிகளின் விருப்பத்துக்கு அமைய உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை தொகுதிகள் நிர்ணயம் செய்யப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டுமென வலியுறுத்திய அவர், நடைமுறையில் உள்ள தேர்தல் முறைமைக்கு அமையவே தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் கூறினார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் மீனவர் பிரச்சினை, விவசாய பிரச்சினை தொடர்பான கூட்டங்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் அழைக்கப்படுவதில்லை எனவும் வன்னி மாவட்டத்தில் ஒருங்கிணைப்புக் குழு நியமிக்கப்படாத காரணத்தால் அரச அதிகாரிகள் தன்னிச்சையாக செயற்படுகிறார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

## வசந்த, சிறிதம்ம...

அந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இருவரையும் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு, நவம்பர் 23ஆம் திகதி கல்வெவ சிறிதம்ம தேரர், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

எனினும், கல்வி அமைச்சுக்கு முன்னால் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் குறித்து கடுவெல நீதவான் நீதிமன்றத்தால் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவரை, அடையாள அணிவகுப்பின் போது அடையாளம் காண்பிக்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், பயங்கரவாதத் தடைச்சட்ட வழக்கு தொடர்பில் வசந்த முதலிகே மீண்டும் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

## சூழ்ச்சிகளுக்குள்...

அங்கு தொடர்ந்து உரையாற்றி அவர், அரசியலமைப்பு சபையை அமைத்து சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்து உள்ளூராட்சி தேர்தலை ஒத்தி வைக்க முயற்சிக்கப்படுவதாகவே மக்களிடையே கருத்துகள் நிலவுகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

“இவ்வாறான அரசாங்கத்தின் சூழ்ச்சிகளுக்குள் நீங்கள் (சபாநாயகர்) சிக்கிவிட வேண்டாம். நீங்கள் உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்” என்றார்.

“நாங்கள் மூன்று வருடங்களாக மேற்பார்வை குழுக்கள் உள்ளிட்டவற்றை அமைக்குமாறு கோரினோம். இப்போது வேகமாக அரசியலமைப்பு சபை, சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன” என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமது கோரிக்கை குறித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற போதும் இப்போது நடவடிக்கைகள் துரிதமாகியுள்ளதாக குறிப்பிட்ட அவர், இதன்படி தமக்கு தேவையானவர்களை அந்தக் குழுக்களுக்கு நியமித்து தேர்தலை ஒத்தி வைக்க முயற்சிக்கப்படுவதாகவே தகவல்கள் வெளியாகியுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

## இலங்கையை...

இது தொடர்பில் திங்கட்கிழமை (05) கருத்து வெளியிட்ட சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங் மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களுடன் சீனா நீண்டகாலமாக நல்ல ஒத்துழைப்புடன் செயற்படுகிறது என்றும் இலங்கையின் கடன் பிரச்சினை தொடர்பில், இலங்கையின் நெருக்கடி மற்றும் சவால்களுக்கு சீனா அதிக முக்கியத்துவம் கொடுப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தொடர்புடைய நாடுகளும் சர்வதேச நிதி நிறுவனங்களும் சீனாவுடன் இணைந்து செயற்படுவதோடு, இலங்கையின் தற்போதைய நெருக்கடிகளை சமாளிப்பதற்கும், அதன் கடன் சுமையைக் குறைப்பதற்கும், நிலையான அபிவிருத்தியை அடைவதற்கும் ஆக்கபூர்வமான பங்களிப்பைத் தொடரும் என நாங்கள் நம்புகிறோம் என்று தெரிவித்தார்.

## பணிப்பாளர்களுக்கு...

சந்தேக நபருடன் தொடர்புடையவர்களை வெளிக்கொணர வேண்டுமாயின் அவரை அடையாள அணிவகுப்பில் முன்னிலைப்படுத்த வேண்டும் என சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலிப் பீரிஸ், மன்றில் கோரி நின்றார்.

மேலும், வைத்தியசாலையின் பணிப்பாளர்கள் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயற்சிப்பதாகவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மன்றுக்கு அறிவித்தார்.

அவரது கோரிக்கையை கருத்தில் கொண்ட நீதவான் மேற்குறிப்பிட்ட உத்தரவைப் பிறப்பித்ததுடன், சந்தேக நபரை 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

வறுமையான குடும்பங்களுக்கு பணம் பெற்றுத்தருவதாக கூறி, முன்னணி வைத்தியசாலைகளுக்கு சிறுநீரகங்களை பெற்றுக்கொடுத்ததன் பின்னர் பணம் வழங்காமை தொடர்பில் ஐவரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுநீரகங்களை பணத்துக்காக வழங்கும் நபர்கள் மற்றும் அவற்றை பெற்றுக்கொள்ளும் தரப்பினர் ஆகியோருக்கு இடையில் சந்தேகநபர் தரகராக செயற்பட்டுள்ளதாகவும் தரகுப் பணத்திற்கு மேலதிகமாக சிறுநீரகத்திற்காக வழங்கப்பட்ட பணத்தில் ஒரு பகுதியை மோசடி செய்துள்ளதாகவும் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## 60 வயதில் கட்டாய ஓய்வு; வர்த்தமானி வெளியானது

பிரதமரும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமான தினேஷ் குணவர்தனவின் கையொப்பத்துடன் இந்த அதிவிசேட வர்த்தமானி திங்கட்கிழமை (05) வெளியிடப்பட்டுள்ளது.

55 வயது பூர்த்தியடைகின்ற போது அல்லது அதன் பின்னர் எந்தவோர் அரச ஊழியரையும் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற பணிக்க முடியும் என வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பினூடாக அல்லது ஏனைய சட்டங்களின் ஊடாக கட்டாய ஓய்விற்கான வயதெல்லை குறிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து அரச ஊழியர்களும் 60 வயதில் கட்டாயம் ஓய்வு பெற வேண்டும் என இந்த அதிவிசேட வர்த்தமானியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## எம்.பி குறித்து ஆராயப்படும்

21 ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள நிலைமையில் இரட்டைக் குடியுரிமையை கொண்ட பெண் எம்.பியொருவர் சட்டத்திற்கு புறம்பான வகையில் இந்தப் பாராளுமன்றத்தில் இருக்கின்றார் என்று முஜிபூர் ரஹ்மான் குறிப்பிட்டுள்ளார் என்றும் இதன்படி இந்த விடயத்தில் சபாநாயகர் முன்னெடுக்கும் நடவடிக்கை என்ன என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

இதன்போது பதிலளித்த போதே சபாநாயகர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

## சிவனொளிபாதமலை யாத்திரை ஆரம்பம்

பலாங்கொடை-பொகவந்தலாவ வீதி, அவிசாவளை -ஹட்டன் வீதி, இரத்தினபுரி - பலாபந்த வீதி, குருவிட்ட - ஏரத்ன ஆகிய நான்கு வீதிகளின் ஊடாக பெரஹெர சிவனொளிபாதமலையை நோக்கி எடுத்துச்செல்லப்படுகின்றது.

பெல்மதுளை, கல்பொத்தாவெல விஹாரையில் திங்கட்கிழமை (05) ஆம் திகதி மாலையும், செவ்வாய்க்கிழமை (06) அதிகாலையும் சிவனொளிபாதமலையின் பிரதமகுருவும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் வேந்தருமான வணக்கத்துக்குரிய பெங்கமுவே தம்மதின்ன நாஹியன் தலைமையில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.



## 13ஐ பலப்படுத்துவதே ஆரம்பத் தீர்வு

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கு விடுத்திருக்கின்ற அழைப்பினை ஏற்று அதனை எமது மக்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதற்கு தமிழ் அரசியல் தரப்பினர் முன்வர வேண்டும்.

எம்மைப் பொறுத்தவரை, தற்போது இந்த நாட்டின் அரசியல் யாப்பில் நடைமுறையில் இருக்கின்ற எமது அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தத்தினை பலப்படுத்தி அதனை முன்னெடுப்பதையே எமது மக்களின் அரசியல் ரீதியான பிரச்சினைக்கு ஓர் ஆரம்பத் தீர்வாகக் கருதுகிறோம்.

இல்லாததைப் பற்றிக் கதைத்து இருப்பதையும் கைவிட்டு விடக்கூடாது என்பதை நாம் வலியுறுத்துகிறோம்.

தமிழ் மக்களது பிரச்சினை தொடர்பில், கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக இப்போதே சில நாடகங்கள் அரசியல் அரங்கில் மேடையேற்றப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது. அதிகாரப் பகிர்வினை மேற்கொள்ளுமாறு இனவாதிகளும் சொல்வதற்குரிய சூழலை ஏற்படுத்த வேண்டுமே தவிர, இனவாத சக்திகளுக்கு மெல்வதற்கு அவலை கொடுக்க கூடாது” என்றார்.

## 349 பட்டதாரிகள் சிறையில் அடைப்பு

மொத்தமாக 349 பட்டதாரிகளும் உயர்தரத்தில் சித்தியடைந்த 5,395 கைதிகளும் சாதாரண தரத்தில் சித்தியடைந்த 17,616 கைதிகளும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் சிறையில் உள்ள 2.2% பேர் பாடசாலைக்குச் செல்லவில்லை என்று புள்ளிவிவரங்கள் மூலம் அறிய முடிகிறது. கடந்த ஆண்டு 16 வயதுக்குட்பட்ட 87 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதுடன், 70 வயதுக்கு மேற்பட்ட சிறைக் கைதிகள் 436 பேர் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

# சேதன பசளை திட்ட மாபியாக்கள் தொடர்பில் கவனம்



உரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளை ஏமாற்றும் சேதன பசளை திட்ட மாபியாக்கள் தொடர்பில் உரத் திணைக்களம் விசேட கவனம் செலுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாட்டில் உரம் தட்டுப்பாடு இல்லை என அரசாங்கம் குறிப்பிடுகிறது, ஆனால் அது நடைமுறைக்கு சாத்தியமற்றதாக உள்ளது. சந்தையில் உரம் ஒவ்வொரு விலையில் காணப்படுகிறது.

நெல்லுக்கான உத்தரவாத விலை இல்லாத காரணத்தால் விவசாயிகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். நெற்பயிர் செய்கை உற்பத்திக்கான செலவுக்கும், நெல் சந்தைப்படுத்தல் சபை நிர்ணயிக்கும் விலைக்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படுகிறது.

ஆகவே விவசாயிகள் திருப்தியடையும் வகையில் நெல்லுக்கான உத்தரவாத விலை நிர்ணயிக்க வேண்டும். விவசாயத்துறையில் எடுத்த தீர்மானங்களின் விளைவை முழுநாட்டு மக்களும் தற்போது நன்கு எதிர்கொண்டுள்ளார்கள்.

விவசாயத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு விரைவான தீர்வை காணாவிட்டால் நாடு மிக மோசமான எதிர்விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்

> **தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உணவு பொருட்கள் தற்போது முழுமையாக இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது**

என்றார். நாட்டின் உணவு பாதுகாப்பு எந்நிலையில் காணப்படுகிறது என்பதைப் பற்றி புதிதாக குறிப்பிட வேண்டிய தேவை கிடையாது. உணவு பாதுகாப்பிற்கு உரிய சட்டம் இதுவரை இயற்றப்படவில்லை. உணவு பாதுகாப்புக்கு விரைவான தீர்வு எடுக்காது விட்டால், அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உணவு பொருட்கள் தற்போது முழுமையாக இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டபட்டுள்ளது என்றார்.

### இந்திய மீனவர் பிரச்சினை;

# துப்பாக்கியால் சுடுவேன் எனக் கூறிய பிரதமர் ஜனாதிபதியாக இருக்கிறார்

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக இருக்கும்போது இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி இந்திய மீனவர்கள் நுழைந்தால் அவர்களை துப்பாக்கியால் சுடுவோம் என கூறியிருந்தார். எனவே தற்போது, அவரால் இந்திய மீனவர்கள் பிரச்சினையில் தீர்மானத்துக்கு வரமுடியும் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஒலுவில் துறைமுகம் தோல்வியடைந்த துறைமுகத் திட்டமாகவே இருக்கிறது. இந்தத் துறைமுகத்தில் மணல் நிரம்பும் போது அதனை அகற்றுவதற்கு நோர்வே அரசாங்கம் மணல் அகற்றும் இயந்திரம் ஒன்றை வழங்கியிருந்தது. இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி ஆரம்பத்தில் மணல் அகற்றப்பட்டாலும் தற்போது இந்த இயந்திரம் காணாமல் போயுள்ளது.

எனக்குத் தெரிந்த வரையில், இந்த மணல் அகற்றும் இயந்திரம் ஹம்பாந்தோட்டைக்கு சென்றுள்ளதாக அறிகிறேன் என்றார்.

இதன்போது குறுக்கீடு செய்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஒலுவில் துறைமுகத்தைப் புதிப்பிக்கும் நடவடிக்கைகள் ஜனவரி முதல் ஆரம்பிக்கப்பட உள்ளன. இதனால் 3 மாதங்களுக்கு பின்னர் அந்தத் துறை முகத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும் என்றார்.

இதற்கு மிக்க நன்றி எனக்கூறி உரையை தொடர்ந்த விஜிதஹேரத், அதுபோல வடபகுதி மீனவர்கள் இந்திய மீனவர்களின் ஆக்கிரமப்புகளாலும் பெரும் பாதிப்புகளுக்கு நீண்ட நாள்களாக



முகங்கொடுத்து வருகின்றனர். குறிப்பாக முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி உள்ளிட்ட மாவட்ட கடற்பரப்புகளுக்குள்ளேயே இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள் என்றார்.

மேலும், இருதரப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்து இப்பிரச்சினைக்குத் தீர்வுக்காணப்பட வேண்டும். அதுபோல, இராஜதந்திர தலையீடுகளாலும் இப்பிரச்சினையை தீர்க்க முயல வேண்டும் என்றார்.

இதன்போது குறுக்கீடு செய்த டக்லஸ், இந்திய மீனவர்கள் பெரிய மீன்பிடி படகுகளில் வருகிறார்கள். அவர்களது படகுகளை பறித்து எமது மீனவர்களுக்கு அவற்றை நாம் வழங்கி வருகிறோம் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக இருக்கும் போது மன்னாருக்குச் சென்றிருந்த போது, இந்திய மீனவர்கள் இலங்கைக்குள் வந்தால் துப்பாக்கியால் சுடுவோம் எனக் கூறியிருந்தார். இப்போது ஜனாதிபதியாக அவரே இருக்கிறார். எனவே, நீங்கள் தீர்மானத்துக்கு வரமுடியும் எனவும் தெரிவித்தார்.

# கஞ்சா பயிர்ச்செய்கையை சட்டமாக்க அரசாங்கம் இணங்கவில்லை

கஞ்சா பயிர்ச் செய்கைகளை சட்டரீதியாக முன்னெடுப்பதற்கு அரசாங்கத்துக்குள் எந்த விதமான இணக்கப்பாடுகளும் இதுவரையில் எட்டப்படவில்லை என தெரிவிக்கும் சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிரஜயகொடி, ஆயுர்வேத மருத்துவத்துக்கு கஞ்சாவைப் பயன்படுத்தவே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நேற்றைய (06) பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு, பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தனதேரரின் கேள்விகளுக்குப் பதிலளித்து உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கஞ்சா பயிரிடுவது, உடமையில் வைத்திருப்பது, கஞ்சா தொடர்பில் பிரசாரங்களை மேற்கொள்வது என்பவற்றுக்கு இலங்கையில் தடையிருக்கிறது. ஆனால் பாராளுமன்றத்தில் கஞ்சா தொடர்பில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக இந்நாட்டின் ஜனாதிபதியே அதனை செய்கிறார் என்பது கவலைக்குரியது என அத்துரலிய ரத்தனதேரர் சபையில் தெரிவித்தார்.

மேலும், கஞ்சா பயிரிச்செய்கையால் ஏற்படும் சுற்றுச்சூழல், கலாசாரப் பாதிப்புகள் தொடர்பில் அரசாங்கம் அறிந்துவைத்துள்ளதா? கஞ்சா தொடர்பில் ஏற்படக்கூடிய



உளவியல் ரீதியான பிரச்சினைகளை அரசாங்கம் அறிந்துவைத்துள்ளதா? காஞ்சாவில் யார் முதலீடுகளை மேற்கொள்ளப்போகிறார்கள்? எந்த நாட்டில் கஞ்சா பயிர்ச் செய்கைக்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது எனவும் அத்துரலிய ரத்தனதேரர் எம்.பி கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர், கஞ்சாவில் யார் முதலீடுகளை மேற்கொள்வார்கள் என்பது தெரியாது. இதுதொடர்பில் அரசாங்கத்தில் இணக்கப்பாடுகள் எதுவும் எட்டப்படவில்லை.

மேலும், கஞ்சா பயிர்ச் செய்கைக்கு அரசாங்கம் இணங்கவில்லை. ஆனால், ஆயுர்வேத மருந்தாக அதைப் பயன்படுத்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்ட உரையில் கஞ்சா பயிர்ச்செய்கை தொடர்பில் உரையாற்றியிருந்தார் எனவும் தெரிவித்தார்.



### இனப்பிரச்சினைக்கு தீர்வு போல

# மலையக மக்களின் அடிப்படை பிரச்சினைகளும் தீர்க்கவேண்டும்

மலையக மக்களின் வீடு, காணி, சம்பளம் உள்ளிட்ட அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமெனத் தெரிவிக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன், மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் ஜனாதிபதிக்கு முழு ஆதரவை வழங்குவோம் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு நாம் எதிரானவரர்கள் அல்ல. அவரின் சிறந்த வேலைத் திட்டங்களுக்கு நாம் ஒத்துழைப்புகளை வழங்குவோம். இரசாயன உரம் மீதான தடை விதிக்கப்பட்டு வெளியிடப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் ஊடாக நாட்டுக்கு இடிவிழுந்தது. இது போன்ற தவறுகள் நடைபெறும். அவற்றைத் திருத்திக் கொள்ளவேண்டும்.

இனப் பிரச்சினைக்கு தீர்வை வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தது போல, மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையும் ஜனாதிபதி தீர்க்க வேண்டும். மலையக மக்களுக்கு காணிகளோ அல்லது வீடுகளோ இல்லாத நிலையிலேயே வாழ்கிறார்கள். இவ்வாறான நிலையில், தோட்ட மக்களின் காணிகளை கம்பெனிகள் அபகரிக்கும் நிலை உருவாகியுள்ளது எனவும் தெரிவித்தார்.

# பாராளுமன்றத்தில் ஜோக்கர் போல ரணில் நடந்துகொள்கிறார்

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நகைச்சுவை நடிகரைப் போல நடந்துக் கொள்வதாகக் குற்றஞ்சுமத்திய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின்பண்டார, தேர்தலைக் காலந்தாழ்த்தும் நோக்கில் அரசியலமைப்புப் பேரவைக்கான நியமனங்களை துரிதப்படுத்தக்கூடாது எனவும் தெரிவித்தார்.

அரசிலயமைப்புப் பேரவையின் நியமனங்களை அரசாங்கம் துரிதப்படுத்தி வருகிறது. துறைசார் மேற்பார்வை குழுக்களை நியமிக்க வேண்டுமென நாம் கடந்த 3 வருடங்களாகக் கூறிவருகிறோம். ஆனால், அதனை செய்யாது தேர்தலைக் காலந்தாழ்த்தும் நோக்கிய அரசியலமைப்புப் பேரவை நியமனங்களை அரசாங்கம் துரிதப்படுத்துகிறது.

அரசியலமைப்புப் பேரவைக்கு ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் உள்ளிட்டவர்கள் சார்பில் ஒருவரை தெரிவு செய்யவேண்டியுள்ளது. பொருத்தமான நபர்களை தெரிவு செய்து அரசியலமைப்புப் பேரவைக்கு அனுப்பவில்லை என்றால் கடும்பிரச்சினைகள் ஏற்படும்.

இதேவேளை, தேர்தலைக் காலந்தாழ்த்தும் நோக்கில் அரசியலமைப்புப் பேரவை நியமனங்களை ஜனாதிபதி துரிதப்படுத்துவாராக இருந்தால் அதற்கு இடமளிக்கப் போவதில்லை. மேலும் ஜனாதிபதி



ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நகைச்சுவை நடிகரைப் போல செயற்படுகிறார். முஜிபூர் ரஹ்மான் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஆற்றிய உரைக்கு பதில்வழங்காது, டயானா எம்.பி தொடர்பில் ஜனாதிபதி விளக்கமளிக்கிறார். டயானாவைத் தூய்மைப்படுத்தும் வேலைகளை ஜனாதிபதி செய்கிறார்.

இரட்டைக் குடியுரிமைக் கொண்டவர்கள் பாராளுமன்றத்தில் இருக்கமுடியாது. இதற்காகவே 21ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இவ்வாறான நிலையில் இலங்கைக் குடியுரிமைக் கொண்டிராத ஒருவர் பாராளுமன்றத்தில் இருக்கிறார். எனவே இந்த விடயத்தில் சபாநாயகர் உள்ளிட்ட அனைவரும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒருமாதம் விடுமுறை

வரவு செலவுத் திட்டம் விவாதம் நிறைவடைந்த பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒரு மாதத்துக்கும் அதிகமான காலம் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த வருடத்துக்கான பாராளுமன்ற அமர்வுகள் இம்மாதம் 13ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. வருடத்துக்கான முதல் பாராளுமன்ற அமர்வு ஜனவரி 17ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்துக்கான இறுதி வாக்கெடுப்பு நாளை (08) மாலை 5 மணியளவில் நடைபெற உள்ளது.

பெறுமதிசேர்வரி ( திருத்தம்) உள்நாட்டு இறைவரி (திருத்தம்) திருத்தச் சட்ட மூலங்களின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் 9ஆம் திகதி நடைபெற உள்ளதாக பாராளுமன்ற செயலாளர் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

இதன்பின்னர், வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு 13ஆம்திகதி முழுநாள் ஒதுக்கப்பட்டுள்ளது.

# நான்கு தலைவர்கள் உள்ளிட்ட தூதுவர் நியமனங்களுக்கு அனுமதி

நான்கு நிறுவனத் தலைவர்கள் மற்றும் தூதுவர் ஒருவரின் நியமனங்களுக்கு பாராளுமன்ற உயர்பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

அதற்கமைய, குவைட் இராஜ்ஜியத்துக்கான புதிய தூதுவராக காண்டீபன் பாலசுப்ரமணியத்தை நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் புதிய தலைவராக உபுல் தர்மதாஸவின் நியமனத்துக்கும், தேசிய காகிதக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக கே.ஏ. விமல் ரூபசிங்கவின் நியமனத்துக்கும் பாராளுமன்ற உயர்பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளதாக செயலாளர்நாயகம் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக, பிரதேச அபிவிருத்தி வங்கியின் புதிய தலைவராக எம்.டி. மஹிந்த சாலிய, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக கொமடோர் (பொறியியலாளர்) எச்.எஸ். பாலசூரியவை நியமிப்பதற்கும் உயர்பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

உயர்பதவிகள் பற்றிய குழு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியதுடன், இந்தக் கூட்டத்தில் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான வைத்திய கலாநிதி சுதர்ஷனி பெர்ணான்டோ புள்ளே, ரிஷாட் பதியுதீன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# யாழ்ப்பாண கிணற்று நீரை குடிக்கலாமா?

## ஆய்வு செய்து அறிவிக்க கோரிக்கை

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிணற்று நீரைக் குடிப்பதற்கு பயன்படுத்தலாமா என்பது பற்றி, பல்கலைக்கழக துறை சார்ந்த அதிகாரிகள், அரசியல் பிரதிநிதிகள் ஆய்வு ரீதியாக பரிசோதனைகள், கலந்துரையாடல்களை நடத்தி, மக்களுக்கு அறிவிக்கவேண்டும் என கலாநிதி ஆறுதிருமுருகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணக் குடாநாடு மட்டுமன்றி, வடபகுதி எங்கும் போத்தல் தண்ணீரின் ஆதிக்கம் வலுப்பெற்று, மக்களின் பணம் வீண்விரயமாகிறது. ஏழை வீட்டின் மரணச் சடங்கு முதல் தண்ணீர் போத்தலால் பணம் மேலதிக செலவாகிறது.

சில காலத்திற்கு முன்பாக கிணற்று நீரில் 'ஒயில்' கலந்துவிட்டது; நீர் மாசடைந்து விட்டது; ஊற்றுக்கள் பயனற்றுவிட்டன எனப் பல போராட்டங்கள், கலந்துரையடல்கள் தொடர்சியாக இடம்பெற்றன. தற்போது இவை அமைதியாகிவிட்டது.

இதைப் பயன்படுத்தி அன்று ஆரம்பித்த தண்ணீர் போத்தல் வியாபாரம், இன்று மரணசடங்குகள், வீட்டுவிழாக்கள், கலை நிகழ்வுகள், மண்டப விழாக்கள் என அனைத்து இடங்களிலும் கொடிகட்டிப் பறக்கிறது. போத்தல் தண்ணீரை பயன்படுத்தலாமா, இவை எங்கு எப்படி தயாராகின்றன தொடர்பான வெளிப்படுத்தல்கள் இருக்கின்றனவா?

ஆரம்ப காலங்களில் வோவில்களில் உள்ள கிணற்று நீரை விரும்பிக் குடிப்பார்கள். இதனை தீர்த்தம் என்றே குடிப்பார்கள். வீடுகளிலும் அவ்வாறே கிணற்றுநீரை பயன்படுத்தினார்கள்.

இன்று கிணற்றில் தண்ணீர் அள்ளினாலே பிரச்சினை என்கிறார்கள். எனவே, யாழ்ப்பாணத்து கிணற்று நீரை பயன்படுத்தலாமா இல்லையா என்பது பற்றி, யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞானத் துறையை சார்ந்தவர்கள், விவசாயத் துறைசார்ந்தவர்கள், பொருளியல் துறைசார்ந்தவர்கள், அரசியல் பிரதிநிதிகள் ஒன்று கூடி ஆய்வுகள் மேற்கொண்டு, பொதுமக்களுக்கு சாதக பாதகங்களை அறிவிக்க வேண்டும் என்றார்.

## கால்நடை திருடியவர்கள் கைது

■ செ. கீதாஞ்சன்

பாண்டியன்குளம் பகுதியில், பிரதேச மக்களின் கால்நடை வாழ்வாதாரங்களை கடத்தி, இறைச்சிக்கு பயன்படுத்திய இருவர் நேற்று முன்தினம் (05) நட்டாங்கண்டல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில், அண்மைக்காலங்களாக தொடர்ச்சியாக மக்களின் கால்நடை வாழ்வாதாரங்கள் காணாமல் போகின்றமை குறித்து, பொதுமக்களால் குற்றச்சாட்டுகள் பரவலாக முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், நேற்று முன்தினம் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கால்நடை உரிமையாளரால், நட்டாங்கண்டல் பொலிஸ் நிலையத்தில், செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய நட்டாங்கண்டல் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரத்னநாயக தலைமையிலான பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ரத்னனாயக, ஜெயப்பிரியன், ஜெயதிலக, பண்டார ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழு மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கை, விசாரணைகளை அடுத்து, அதே இடத்தை சேர்ந்த 17, 27 வயதுடைய இருவர் கைதாகினர்.

### வவுனியா நகர சபையால்

## இரண்டு கட்டட தொகுதிகள் திறந்து வைப்பு

■ க. அகரன்



உள்ளூர் மேம்பாட்டு ஆதரவு திட்டத்தின் கீழ் பூங்காவினுள் பொது நிகழ்வுகளுக்கான கட்டமைப்புகளுடன் கூடிய திறந்த மேடை மற்றும் வவுனியா நகரில் இறைச்சிக்கடைக்கான 06 கடைகளை உள்ளடக்கிய கட்டட தொகுதி ஆகியவற்றை வவுனியா நகர சபை தவிசாளர் இ. கௌதமன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் சுஜன், நகர சபை உறுப்பினர்கள், நகர சபை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். குறித்த இரு கட்டட தொகுதிகளும் 16 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





## கிளிநொச்சியில் இரண்டு கோவில்களில் கொள்ளை

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புலோப்பளை, தம்பகாமம் ஆகிய பகுதிகளில் இரண்டு கோவில்கள், நேற்று முன்தினம் (05) இரவு உடைக்கப்பட்டு பெருமளவான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, புலோப்பளை பகுதியில் அமைந்துள்ள வைரவர் கோவில் உடைக்கப்பட்டு, விக்கிரகங்களின் ஐம்பொன் தகடுகள், விக்கிரகங்கள் களவாடப்பட்டுள்ளன.

அதேபோல, கிளிநொச்சி, தம்பகாமம் பகுதியில உள்ள நெல்லியாய் அம்மன் கோவிலின் கதவுகள் உடைக்கப்பட்டு, அங்கிருந்தும் பெருமளவான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. குறித்த கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### காரைநகர் முருகன் கோவில்

## பலிபீட மயில் உடைப்பு

■ எம். றொசாந்த்



காரைநகர், பயிரிக்கூடல் முருகன் கோவிலின் பலி பீடத்தில் காணப்பட்ட மயிலின் தலையை விஷமிகள் உடைத்து சேதமாக்கியுள்ளனர். கோவில் பூசகரால், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

## மருத்துவ மாணவர் ஆராய்ச்சி மாநாடு

■ நிதர்சன் விணோத்




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மருத்துவ மாணவரின் ஐந்தாவது ஆராய்ச்சி மாநாடு, நேற்று முன்தினம் (05) மருத்துவபீட கூவர் அரங்கில் நடைபெற்றது.

'ஆராய்ச்சியினூடான ஞானம்' என்ற தொனிப்பொருளில் அமைந்திருந்த இந்த ஆராய்ச்சி மாநாட்டில் பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தின் பிரயோக சுகாதார ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த சுகாதார தரவு அறிவியல் மற்றும் பொது சுகாதார பேராசிரியர் கிருஸ்ணராஜா நிரந்தரகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு முதன்மை உரையாற்றினார்.

நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் இ. சுரேந்திரகுமாரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ் மக்கள் அவசியம் பார்க்க வேண்டிய

## 'தாய்நிலம்' ஆவண படம்




தமிழ் மக்களின் தாயகமான வடக்கு-கிழக்கில், காலம் காலமாக அரசாங்கங்கள் மேற்கொண்டுவரும் நிலஅபகரிப்பை ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டும் 'தாய்நிலம்: நில அபகரிப்பு - இலங்கை வாழ் தமிழ் மக்களின் உண்மையான பெருந்தொற்று' என்ற ஆவணப் படத்தை, ஒவ்வொருவரும் அவசியம் பார்க்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்.

இந்தக் குறும்படம் குறித்து அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது; இந்த ஆவணப்படம், தமிழ் மக்களின் பூர்வீக காணிகள், வரலாற்று ரீதியாக தமிழ் மக்களின் காணிகள் எவ்வாறு அபகரிக்கப்பட்டன என்பது பற்றியும் தமிழர் தாயகத்தின் இன்றைய நிலைமை எவ்வாறு இருக்கின்றது என்பது பற்றியும் விளக்குகின்றது. தமிழ் மக்கள் அனைவரும் கட்டாயமாக பார்க்க வேண்டிய ஓர் ஆவண படம் இதுவாகும். இந்த ஆவண படத்தை YouTube தளத்தில் பார்க்கமுடியும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### முஸ்லிம் கட்சிகள், தமிழ்க் கூட்டமைப்புடன் இணைந்து

# தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும்

## மக்கள் காங்கிரஸ் பிரமுகர் ஏ.எல். கால்தீன்

■ நூருல் ஹுதா உமர்



ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் 'காதல் கடிதம்' எழுதிக்கொண்டிருக்காமல், முஸ்லிம் அரசியல்வாதிகள் ஜனாதிபதியை சந்தித்து, முஸ்லிம்களுக்கு உள்ள காணிப் பிரச்சினைகள், முஸ்லிம்களின் இருப்புக்கான பிரச்சினைகள், உரிமைகள், உடமைகளுக்கான பிரச்சினைகள், விவசாயிகள் உட்பட தொழில்துறையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வை பேச முன்வரவேண்டும். முஸ்லிம்களுக்கு இலங்கையில் ஆயிரக்கணக்கான பிரச்சினைகள் இருக்கின்றன என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட மத்தியகுழு உறுப்பினர் ஏ.எல் கால்தீன் தெரிவித்தார்.

ஊடக சந்திப்பொன்றில் அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது: வடக்கு, கிழக்கில் ஜனாதிபதி வழங்க இருக்கும் தீர்வுத்திட்டத்தில் முஸ்லிம்களின் நிலைப்பாடு என்ன என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும். முஸ்லிம் தலைவர்கள், தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து தீர்வு திட்டத்தை ஒற்றுமையாக முன்வைக்க முன்வர வேண்டும். மர்ஹூம் அஷ்ரப், முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கி முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெறப் போராடினார். ஆனால், இப்போது முஸ்லிம்கள் மத்தியில் அந்த நிலை மங்கிவிட்டது.

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ஒன்றிணைந்து, முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுத் திட்டத்தை முன்மொழிய வேண்டும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ் மக்களின் குரலாக இயங்குகிறது. அவர்களின் அர்ப்பணிப்பை பாராட்டுகிறேன். முஸ்லிம்களின் ஒற்றுமை சிதைவால், முஸ்லிம்களின் காணி மீது அரச பயங்கரவாதம் தலையிட ஆரம்பித்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி, தீர்வுத் திட்ட வரைவை தயாரிக்க, சகல அரசியல் இயக்கங்களையும் கொண்ட குழு அமைக்கப்பட்டு, உடனடியாக இவ்விடயம் ஆராயப்பட வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழும் அம்பாறையில், தமிழ் மொழி பேசும் அரசாங்க அதிபரைக் கூட நியமிக்கமுடியாதளவுக்கு வங்கரோத்து நிலையில் வாழ்கிறோம் என்பதே, அரசியல் பிற்போக்கு நிலைக்கு நல்ல எடுத்துக்காட்டு என்றார்.

### திருமணம் செய்யுமாறு கான்டபிளை வற்புறுத்தி

## மூன்று பிள்ளைகளின் தாய் கழுத்தை வெட்டி படுகாயம்

■ கனகராசா சரவணன்

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் மனைவியான மூன்று பிள்ளைகளின் தாயார், தனது கணவனின் நண்பனான திருமணம் முடிக்காத பொலிஸ் கான்ஸ்டபிள், தன்னைத் திருமணம் முடிக்க வேண்டும் என்று கோரி, பொலிஸ் நிலையத்தில் தனது கழுத்தை பிளேற்றால் அறுத்து, படுகாயமடைந்த சம்பவம் நேற்று முன்தினம் (05) வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

இதுபற்றித் தெரியவருவதாவது: அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 33 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்தபோது, அதே பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான பொலிஸ் கான்ஸ்டபிளுடன் நட்பு ஏற்பட்டது. இதையடுத்து, மட்டக்களப்பு பிரதேசத்தில் உள்ள நண்பனின் வீட்டுக்குச் சென்று வந்த நிலையில், நண்பனின் 38 வயதுடைய மனைவியுடன் அவருக்கு நட்பு ஏற்பட்டது.

இந்த நட்பின் தொடர்ச்சியாக, இருவருக்கும் இடையே காதல் ஏற்பட்டுள்ள நிலையில், பொலிஸ்கான்ஸ்டபிள் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் பெற்று, அங்கு கடமையாற்றி வந்த நிலையில், அங்கு காதலனை தேடிச்சென்று, தன்னைத் திருமணம் முடிக்குமாறு கோரியுள்ள நிலையில், அதற்கு பொலிஸ் கான்ஸ்டபிள் மறுப்புத் தெரிவித்து வந்தார். அடிக்கடி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, தன்னைத் திருமணம் முடிக்குமாறு தொடர்சியாக தொந்தரவு கொடுத்து வந்துள்ளார்.

இந்த நிலையில், சம்பவதினம் இரவு 7 மணியளவில், பொலிஸ் நிலையத்துக்கு சென்று, பொலிஸ் கான்ஸ்டபிளை தொந்தரவு செய்தபோது, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இருவரையும் கூப்பிட்டு விசாரித்துவிட்டு, வெளியே செல்லுமாறு தெரிவித்தார்.

இதையடுத்து அங்கிருந்து இருவரும் வெளியே வந்தபோது, திடீரென குறித்த மூன்று பிள்ளைகளின் தாய், தான் கொண்டுவந்த பிளேற்றால் தனது கழுத்தை அறுத்தார். படுகாயமடைந்த அவர், உடனடியாக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

### தென்கிழக்குப் பல்கலைக்கழக

## கலை கலாசார பீடத்தின் சர்வதேச ஆய்வரங்கு




■ நூருல் ஹுதா உமர்

தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் 11ஆவது சர்வதேச ஆய்வரங்கு நேற்று (06), 'சிறந்த பங்காளிகளுடன் இணைந்து நிலைபேறான அபிவிருத்திக்கான தற்கால நெருக்கடிகளை முகாமை செய்தல்' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்றது.

கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் தலைமையில் இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில், பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் புவியியல் துறைப் பேராசிரியர் சங்கைக்குரிய பின்னவல சங்கசுமண தேரர் முதன்மைப் பேச்சாளராக zoom தொழில்நுட்பத்தினூடாக கலந்து சிறப்பித்தார்.

சமகால உலக நெருக்கடிகள், இலங்கையின் நெருக்கடிகள், அவற்றை வெற்றிகொள்வதற்கான தந்திரோபாயங்கள் ஆகியவை குறித்து உரையாற்றியதுடன் இவற்றைச் சமூக அறிவியல் மற்றும் மனிதப் பண்பியல் துறை ஆய்வுகள் எவ்வாறு கையாளுகின்றன எனவும் சமூக அறிவியல் மற்றும் மனிதப் பண்பியல் துறை என்பன, ஏனைய துறைகளை ஊடறுத்துச் செல்லும் விதம் குறித்தும், சமூக அறிவியல் ஆய்வுப் பரப்பை விஸ்தரிப்பதனூடாக, சமகால நெருக்கடிகளை கையாளும் வழிவகைகள் குறித்தும் அவரது உரை கவனம் செலுத்தியிருந்தது.

## வலம்புரி சங்குடன் நபர் கைது

■ பாறுக் ஷிஹான்



அம்பாறை மாவட்டம், கல்முனை விசேட அதிரடிப்படை முகாமுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து திங்கட்கிழமை (05) இரவு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆரையம்பதி 3ஆம் பிரிவில் வைத்து, விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட தேடுதலில் சந்தே நபர் கைதானார்.

இவ்வாறு கைதானநபர் வசமிருந்து பல கோடி பெறுதியான வலம்புரி சங்கு ஒன்று விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இச்சோதனை நடவடிக்கையின் பின்னர், கைது செய்யப்பட்ட நபர் உள்ளிட்ட சான்றுப் பொருட்கள் யாவும் காத்தான்குடி பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியதுடன் விசேட அதிரடிப் படையினர் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

### மக்களின் குரலுக்கு செவிசாய்த்து

## உடனடியாக களமிறங்கிய அக்கரைப்பற்று பிரதேச சபை

■ நூருல் ஹுதா உமர்



அக்கரைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பள்ளி குடியிருப்பு இரண்டாம் வட்டார ரஸீனா உம்மா வீதி, மக்கள் பாவனைக்கு பயன்படுத்த முடியாதளவுக்கு குப்பைகள், விலங்கு கழிவுகள், திண்மக் கழிவுகள் என்பவற்றால் நிரம்பி, துர்நாற்றம் கொண்டதாக காணப்பட்டதுடன் கட்டாக்காலிகளின் தொல்லைகளும் அதிகரித்து காணப்பட்டு போக்குவரத்துக்கு இடைஞ்சலாகக் காணப்பட்டது.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு, அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ. றாஸிக்கிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு, துப்புரவு செய்யப்பட்டு மீண்டும் பொதுமக்களின் பாவனைக்கு திறந்து விடப்பட்டது.





## கற்றல் உபகரணங்கள்

பதுளை, ஸ்பிரிங்வெலி கனிஸ்ட தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு மலையக தொழிலாளர் முன்னணியின் அமைப்பு செயலாளர் லெட்சுமனார் சஞ்சய் ஊடாக முன்னெடுக்கப்பட்டது.

(நீலமேகம் பிரசாந்த்)





## கலைஞர் கௌரவிப்பு

கண்டி மாவட்ட கலைஞர்கள் மற்றும் புத்திஜீவிகளை அவ்வப்போது நினைவு கூரும் மலையக கலை கலாசார சங்கம் (இரத்தன தீபம் அமைப்பு) கண்டி, கெப்பட்டிபொல நினைவு மண்டபத்தில் நடத்திய ஆறுமுக நாவலர் நினைவு தின வைபவத்தில், பல்வேறு கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

(மொஹொமட் ஆஸிக்)



## அனைத்தும் முத்துக்கள்...



அக்குறணை பொது நூலகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவு வெள்ளி விழாவை முன்னிட்டு, நூலக அங்கத்தவர்களின் ஆக்கங்களைக் கொண்ட 'அனைத்தும் முத்துக்கள்' என்ற சஞ்சிகை வெளியீட்டு விழாவும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாதுதீன் தலைமையில் அலவத்துகொடையில் அமைந்துள்ள அக்குறணை பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

(மொஹொமட் ஆஸிக்)



## நடமாடும் சேவை



கொழும்பு நட்புறவுச் சங்கம், ஊவா ஹில்ஸ் ரொட்டரி சங்கம், விஷன் ஆகியன ஒன்றிணைந்து, பதுளை 'மெரியட்' விடுதியில் நடமாடும் சேவையை நடத்தியது.

இதன்போது, பதுளை மாவட்டத்தில் கண்பார்வை குறைந்தவர்களுக்கு 500 மூக்குக் கண்ணாடிகளும் அங்கவீனர்கள் 92 பேருக்கு ஊன்று கோல்களும் வழங்கப்பட்டன.

(எம். செல்வராஜா)

### மலையகத்தில் கைவிடப்பட்ட தேயிலைக் காணிகளில்

# மீண்டும் கோப்பி

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா மாவட்டத்தில் ஹைபிரிட் கோப்பியைப் பயிரிட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நுவரெலியா மாவட்டத்தில் கலப்பின காபி பயிர்ச்செய்கையை ஊக்குவித்து பாதிக்கப்பட்ட மலையக விவசாயிகளின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முயல வேண்டும் என நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தால் கோப்பி பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல் மற்றும் செயற்றிட்டத்தின் எதிர்கால திட்டங்கள் குறித்து அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இலங்கை ஆய்வாளர் ஒருவரால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இலங்கைக்கு ஏற்ற கோப்பி இனத்தை நுவரெலியா மாவட்டத்தின், 491 பிரிவுகளில் 352 பிரிவுகளில் இந்தப் புதிய இன கோப்பியை வெற்றிகரமாக செய்கைபண்ண முடியும் என்றார்.



இதற்கமைய, நுவரெலியா மாவட்டத்தில் பல இடங்களில் ஐந்து இலட்சம் செடிகள் சோதனை நோக்கத்திற்காக நடப்பட்டுள்ளதுடன் மேலும் இரண்டு இலட்சம் செடிகள் நாட்டப்படவுள்ளன என்றார்.

ஒரு சாதாரண உற்பத்தியின் மிகவும் சிக்கலான நிலைமை சந்தை இல்லாமை; ஆனால் நுவரெலியா மாவட்டத்தில் விளையும் கோப்பி விதைகளை வாங்குவதற்கு ஜப்பானிய கியோட்டா நிறுவனம் முக்கிய கொள்வனவாளராக இணைந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

தேசிய மட்டத்தில் நாட்டுக்கு டொலரை வரவழைக்கும் மற்றுமொரு முறையாக நுவரெலியா மாவட்டத்தில் இந்தக் கோப்பி செய்கை முறையை மிக வெற்றிகரமாக அறிமுகப்படுத்த தயாராகி வருகிறோம் என்றார்.

தற்போது தேயிலை பயிர்ச்செய்கைக்கு தேவையான நேரடி பணியாளர்கள் இல்லாமை, உரங்கள் இன்மையால் தேயிலை விவசாயம் அழிவின் விளிம்பில் உள்ளது.எனவே தேயிலை பயிர்ச்செய்கையால் இழக்கப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வருமானத்தை கோப்பி பயிர்ச்செய்கை மூலம் நாட்டுக்கு கொண்டு வர முயற்சிக்கின்றோம்.

அடுத்த 3 வருடங்களில் நுவரெலியா மாவட்டத்தில் 400,000 மரக்கன்றுகளை நடுவதே எமது இலக்காகும். இது வெற்றி பெற்றால் வருடாந்தம் 150 மில்லியன் டொலரை வருமானமாகப் பெறலாம் என்றார்.

இந்தக் கோப்பி பயிர்ச்செய்கைக்காக பல்வேறு திணைக்களங்களின் கீழ், கைவிடப்பட்ட தேயிலை பயிர்ச்செய்கை மற்றும் பயிரிடப்படாத நிலங்களை பயன்படுத்த எதிர்பார்க்கிறோம்.

கைவிடப்பட்ட காணிகள் நுவரெலியா இளைஞர்களுக்கு முறையான முறைமையின் கீழ் பகிர்ந்தளிக்கப்படும் எனவும், பொருளாதாரத்தை வலுப்படுத்தி இந்தக் கோப்பி செய்கையை தொடர எதிர்பார்க்கப்படுவதாகவும் நுவரெலியா மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

# அப்துல் கலாமின் பேரன் அடுத்தவருடம் வருகிறார்



■ மொஹொமட் ஆஸிக்

அப்துல் கலாம் சர்வதேச நலன்புரி அமைப்பின் ஊடாக, கண்டியில் பல்வேறு சமூக, சமய, கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இது தொடர்பாக அப்துல் கலாம் சர்வதேச நலன்புரி அமைப்பின் அக்குறணைப் பிரதேச கிளையின் ஒன்று கூடல் அக்குறணை புளுகஹதென்னயுல் அண்மையில் இடம் பெற்றது.

அப்துல் கலாம் சர்வதேச நலன்புரி அமைப்பின் தலைவர் மறைந்த பாரத்தின் குடியரசுத் தலைவர் ஏ.பி. ஜே. அப்துல் கலாம் அவர்களின் பேரன் ஏ.பீ.ஜே.ஏ.கே. சேக் சலீம் அடுத்தவருடம் முற்பகுதியில் இலங்கை வர உள்ளதாகவும் அவர் ஊடாக பல்வேறு சமூக, சமய, கல்வி நடவடிக்கைகளை முன் எடுக்க உள்ளதாகவும் அது தொடர்பான கலந்துரையாடப்பட்டதாகவும் மேற்படி அமைப்பின் இலங்கைக் கிளைத் தலைவர் தேசபந்து, லங்கா புத்தர என்.கருணாகரன் தெரிவித்தார்.

# ஏழுகன்னியர் மலையில் முகாமிட்ட அறுவர் கைது



■ ரஞ்சித் ராஜபக்ஷ

நோட்டன் பிரிஜ், ஏழுகன்னியர் இயற்கை வனாந்தரத்தில் சட்டவிரோதமான முறையில் நுழைந்து அங்கு முகாமிட்டு சில நாள்கள் தங்கியிருந்த அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர்களில் வைத்தியர்கள் மூவரும் அடங்குகின்றனர். கைது செய்யப்பட்ட அனைவரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை பிணையில் விடுதலை செய்யப்பட்டனர் என நல்லத்தண்ணி வனஜீவராசிகள் காரியாலயத்தின் விலங்குகள் பாதுகாப்பு அதிகாரி பிரபாஷ் கருணாதிலக்க தெரிவித்தார்.

காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் வைத்தியர்கள் மூவர் மற்றும் அவர்களுடைய நண்பர்கள் அடங்கலாக அறுவரே, ஏழுகன்னியர் மலை பிரதேசத்துக்கு டிசெம்பர் 2ஆம் திகதி சென்றுள்ளனர். அதன்பின்னர் அவர்கள் வழி தெரியாமல் தடுமாறியுள்ளனர். அதுதொடர்பில் கிடைத்த தகவல்களுக்கு அமைய வனஜீவராசிகள் திணைக்களத்தினர் முன்னெடுத்த நடவடிக்கையால் அவர்கள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

அதன்பின்னர் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன், அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 27ஆம் திகதி ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்று பிரபாஷ் கருணாதிலக்க தெரிவித்தார்.

# கொட்டகலை பிரதேச சபைக்கு விருது

■ எஸ். கணேசன்

இலங்கை அரச நிதி கணக்காய்வாளர் சங்கம் மற்றும் இலங்கை பட்டய கணக்காய்வாளர் நிறுவனம் என்பன இணைந்து வருடாந்தம் நடத்தும் சிறந்த கணக்காய்வு அறிக்கை மற்றும் கணக்கு விவரங்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், 2021 ஆம் ஆண்டுக்கான சமர்ப்பிக்கப்பட்ட கணக்கு விவரங்களுக்காக நுவரெலியா மாவட்டத்தில் கொட்டகலை பிரதேச சபை பெற்றுக் கொண்டது.



இந்த விருதினை பெறுவதற்கு உத்தியோகத்தர்களை ஊக்குவித்த கொட்டகலை பிரதேச சபையின் செயலாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கும் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, நுவரெலியா மாவட்டத்தில் கொட்டகலை பிரதேச சபைக்கு மட்டுமே இவ்விருது கிடைக்கபெற்றது என்பதில் பெருமிதம் அடைவதாக பிரதேசசபை தவிசாளர் ராஜமணி பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

### நுவரெலியா ரேஸ்கோர்ஸ் மைதானத்தின்

# 84 ஏக்கர் அபகரிப்பு

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா பந்தய மைதானத்தின் 84 ஏக்கர் அனுமதியின்றி கையகப்படுத்தப்பட்டுள்ளதாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் டபிள்யூ.குலசூரிய தெரிவித்தார்.

நுவரெலியா ரேஸ்கோர்ஸுக்குச் சொந்தமான எண்பத்து நான்கு ஏக்கர் காணியில், பல இடங்கள் அனுமதியின்றி பல்வேறு தரப்பினரால் சுவீகரிக்கப்பட்டுள்ளதாகவும், பல அனுமதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



இந்த மைதானத்துக்கான கண்காணிப்பு பணியில் திங்கட்கிழமை (05) ஈடுபட்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், தனியாரிடம் ஒப்படைக்கப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான நுவரெலியா ரேஸ்கோர்ஸ் பல்வேறு தரப்பினரால் கையகப்படுத்தப்பட்டு, பல தடவைகள் அனுமதியின்றி நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் இவ்வாறான நிர்மாணங்களை அகற்ற வேண்டும் என்றார்.

# எதிர்கால சமூகத்தைப் பாதுகாக்க விழிப்புணர்வு குழுக்களே அவசியம்

பாடசாலைகளுக்குச் செல்லும் தங்களுடைய பிள்ளைகளுக்கு பகலுணவை பொதி செய்து கொடுக்கும் போது, கொஞ்சம் அதிகமாகவே வைக்கும் பழக்கவழக்கம் பெற்றோர்களிடத்தில் இருந்தது. “கொஞ்சம் கூடவே வைத்திருக்கின்றேன்; சாப்பாடு கொண்டுவராத பிள்ளைகளுக்கும் கொஞ்சம் பகிர்ந்து கொடு” என்றும் கூறியனுப்புவர்.

அந்நிலைமை மாறி, பல ஆண்டுகள் உருண்டோடி விட்டன. தற்போது, தலைகீழாக மாறி, “யார், எதைக் கொடுத்தாலும் வாங்கவே கூடாது. நீயும், யாருக்கும் எதையும் கொடுக்கவும் கூடாது” என மிகக் கண்டிப்போடும், கடும் எச்சரிக்கையையும் விடுத்து வழியனுப்ப வேண்டிய நிலைமையே பெற்றோர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அந்தளவுக்கு போதைப்பொருட்கள் சமூகத்தில் மலிந்துவிட்டன.

பாடசாலை சீருடைகளை அணிந்தபடியே போதைப்பொருள் பயன்படுத்திய சம்பவங்கள், தனியார் வகுப்புகளுக்குச் செல்கின்றோம் எனக்கூறி, தங்களுடைய ஆண் நண்பர்கள் அல்லது காதலர்களுடன் இணைந்து, பெண்களும் போதைப்பொருட்களை பாவிக்கின்றமை அதிகரித்துவிட்டன. ஆக, போதைப்பொருள் வர்த்தகர்கள், தங்களுடைய வலையை மிகச்சரியாக கச்சிதமாக விரித்துள்ளனர்.

இதற்கிடையே, பாடசாலையின் சிற்றுண்டிச்சாலையில் இருந்து, மிகவும் ஆபத்தான போதைப்பொருள் வகைகளில் ஒன்றான, ‘ஐஸ்’ போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளமை, நிலைமையின் மோசமான தன்மையை அச்சொட்டாக படம்பிடித்துக் காட்டிவிட்டது. ஆகவே, பெற்றோர்களே! உங்களுடைய பிள்ளைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உங்களுடைய கைகளிலேயே இருக்கின்றது.

பெரும்பாலும் போதைப்பொருட்கள், பெரும் நகரங்களில் பயன்படுத்தப்பட்டதை, அதுவும் மிகவும் இரகசியமான முறையில் விற்பனை செய்யப்பட்டதை கேள்விப்பட்டிருந்தோம். இன்று மூலை, முடுக்கெல்லாம் விற்பனை செய்யப்படுகின்றன.

குறிப்பாக, இளம் சமுதாயத்தினரை இலக்கு வைத்தே, போதைப்பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அதுவும், அவர்கள் விரும்பும் இனிப்புப் பண்டங்கள் (டொபி) வகைகளிலேயே விற்கப்படுகின்றன.

பாடசாலை நிறைவடைந்தவுடன் வீடுகளுக்குத் திரும்பும் மாணவ, மாணவிகளில் பெரும்பாலானோர், இனிப்பு வகையை கொள்வனவு செய்து மென்று கொண்டே வீடுகளுக்குத் திரும்புவர். அதனை சரியாக இனங்கண்டு கொண்ட போதைப்பொருள் வர்த்தகர்கள், மாணவர்கள் விரும்பும் வகையில் வடிவமைத்து, இனிப்புப் பண்டம் எனும் போர்வைக்குள் போதைப்பொருட்களை விற்பனை செய்கின்றனர்.

போதைப்பொருட்களை விற்பனைச் செய்வோர் தொடர்பில் தகவல்களை கொடுத்தாலும், தகவல்களை கொடுத்தவர்களையே ஒருசில பொலிஸார், காட்டிக்கொடுத்துவிடுகின்றனர் எனப் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர். பணத்துக்காக எதையும் செய்யும் நிலைமையே ஏற்பட்டுள்ளது. எனினும், போதைப்பொருட்களை ஒழிக்கவேண்டும் என்பதில் இன்னும் சில பொலிஸார் கடுமையாக உழைத்துக்கொண்டுதான் இருக்கின்றனர். அவர்களுக்கு நாமெல்லாம் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

ஆகையால், ஒவ்வொரு பொலிஸ் பிரிவுகளிலும் சகல மட்டங்களைச் சேர்ந்தவர்களையும் உள்ளடக்கி, விழிப்புணர்வு குழுக்களை அமைக்கவேண்டும். இல்லையேல், நாட்டையும் எதிர்கால சமூகத்தினரையும் எவராலும் காப்பாற்றவே முடியாது.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

அழிவு சிருஷ்டியின் ஆரம்பம். அழிவு நடப்பதை எந்த ஆத்மாவும் விரும்ப மாட்டாது. ஆனால், இவை நடைபெற்றேயாக வேண்டும்.

புதிய உயிரினங்கள் அவனிக்குத் தேவைப்படுகின்றன. பழையதைக் களைவது அல்ல. ஆனால், இவை மறைந்து போகாது விடின், புதுமையின் விஸ்பரூபங்களை பூமியால் காண முடியாது போய்விடும்.

கால மாற்றங்கள் எல்லாமே நல்லதும் அல்ல. இயற்கை தொலைவதை யார் தான் விரும்புவார்கள்? ஒன்று அகலும் போது, பல உருவங்கள் உயிர்த்தெழுந்தேயாக வேண்டும். கால மாற்றங்களை பழுதடையச் செய்வதும் இந்த மாந்தர்கள்தான். செய்யும் வினை மீளச் சூழும். ஆனால், எதையும் சரிவரச் செய்யத்தயாராக இல்லை. எனவே, புதிய அறிவு மேலோங்க நல்ல அனுபவம் மனிதர்களுக்கு ஏற்படலாம். ஏற்றுக்கொள்ள வேண்டிய தவறை ஏற்பீர்களாக! மீண்டும் அதைச் செய்யற்க!

–பருத்தியூர் பாலவயிரவநாதன்

# அரசாங்கமும் இனவாதமும்



எம்.எஸ்.எம். ஐயூப்

உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதலை அடுத்து, முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வெறுப்புப் பிரசாரத்தின் போது பாவிக்கப்பட்ட இரண்டு விடயங்கள், கடந்த வாரம் மீண்டும் பேசுபொருளாக மேலெழுந்து வந்தன. அதில் ஒன்று, கொவிட்-19 பெருந்தொற்று நோயால் மரணித்த முஸ்லிம்களின் சடலங்களை தகனம் செய்தமையாகும். மற்றையது, மருத்துவர் ஷாபி ஷிஹாப்தீன் பற்றிய விடயமாகும்.

ஆனால், அந்த இரண்டும் இம்முறை முஸ்லிம்களுக்கு எதிராக அல்லாது, முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பை அள்ளிக் கொட்டியவர்களுக்கு எதிராகவே முன்வைக்கப்படுகிறது.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் எம்.யூ.எம் அலி சப்ரி, பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவுசெலவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் கடந்த வாரம் உரையாற்றும் போது, “நாட்டில் கொவிட்- 19 நோய் பரவி இருந்த காலத்தில், அந்நோயால் இறந்த முஸ்லிம்களின் சடலங்களை தகனம் செய்தமை, இலங்கைக்கு வெளிநாட்டு நிதி உதவி பெறுவதில் ஒரு தடையாக அமைந்துள்ளது” என்று குறிப்பிட்டார்.

கொவிட்-19 நோயால் மரணிக்கும் முஸ்லிம்களின் சடலங்களைத் தகனம் செய்தமை, இலங்கைக்கும் மத்திய கிழக்கில் முஸ்லிம் நாடுகளுக்கும் இடையிலான உறவில் பாதிப்புகளை ஏற்படுத்தி இருப்பதாக குறிப்பிட்ட அமைச்சர் சப்ரி, 51 நாடுகளின் கூட்டமைப்பான இஸ்லாமிய நாடுகளின் அமைப்பு, இந்த விடயத்தை மிகவும் பாரதூரமாக கவனத்தில் கொண்டதாக கூறினார்.

“நான் ஒரு முஸ்லிமாக இருந்தும் ஓர் அமைச்சராக இருந்தும், கொரோனாவால் உயரிழந்த முஸ்லிம்களின் சடலங்களைத் தகனம் செய்ய, இடமளித்ததாகப் பலர் என்மீது குற்றஞ்சாட்டியிருந்தனர். ஆனால், ஆரம்பத்திலிருந்தே இவ்வாறான சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நான் இருந்தேன்” என்றும் அமைச்சர் கூறினார்.

பேராசிரியர் சன்ன பெரேரா, பேராசிரியர் மெத்திக்கா வித்தானகே ஆகிய இரண்டு மருத்துவர்களே, இந்தப் பிரச்சினைக்கு முக்கிய காரணம் என்றும் அவர்களே, கொரோனா வைரஸால் மரணிப்போரின் சடலங்களை அடக்கம் செய்தால், அந்த வைரஸ் பரவலாம் என்று கூறியதாகவும் குறிப்பிட்டார்.

புதைக்கப்பட்ட உடலில் இருக்கும் வைரஸ்கள், பல நூறு ஆண்டுகள் மண்ணில் இருந்து வெளியே வந்து, மக்களைத் தாக்கும் என்று பேராசிரியர் மெத்திக்கா கூறியதை அவர் ஞாபகப்படுத்தினார்.

வைரஸ் உயிருள்ள கலங்களில் மட்டுமே வாழும் என்றும் உயிரற்ற பொருட்களில் அவை 24 மணித்தியாலங்கள் வரை மட்டுமே வாழ்கின்றன என்றும் 11 ஆம் வகுப்பு விஞ்ஞானப் பாட புத்தகம் போன்ற சாதாரண பாடசாலை பாட புத்தகத்திலும் குறிப்பிட்டு இருக்கும் நிலையிலேயே, அவர்கள் வைரஸைக் காரணம் காட்டி சடலங்களை அடக்கம் செய்வதைத் தடுத்ததாக அவர் குறைகூறினார். அப்போது இருந்த முழு அமைச்சரவையுமே, சடலங்களை அடக்கம் செய்ய இடமளிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இது எப்போதோ முடிந்துவிட்ட பழைய கதையாக இருந்தாலும், அரசியல்வாதிகளின் இனவாதம் எந்த அளவு ஒரு நாட்டை பாதிக்கலாம் என்பதற்கு இந்த விவகாரம் சிறந்த எடுத்துக்காட்டாகும். அன்று அரசியல் காரணங்களுக்காக, ஆட்சியாளர்கள் இந்த விடயத்தை தவறான முறையில் கையாண்டனர். இந்த விவகாரம் தொடர்பாக, அமைச்சர் சப்ரி கூறிய கருத்துகள் சரியானவையாயினும், அவரது ஒரு கருத்து அரசியல் நோக்கம் கொண்டது என்பதையும் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

கொவிட்-19 பெருந்தொற்று நோய் நாட்டை தாக்கிய காலத்தில், அந்நோயால் மரணிப்போரின் சடலங்களை அடக்கம் செய்ய இடமளிக்க வேண்டும் என்று எவராவது நாடாளுமன்றத்தில் கூறினால், கொதித்தெழுந்து அவ்வாறு கேட்போர் எல்லாரும் இனவாதிகள் என்று சாடிய எவரும், அமைச்சர் சப்ரி இந்த உரையை ஆற்றும் போது மூச்சு விடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்று நோய் பரவ ஆரம்பித்த 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே, அந்நோயால் மரணிக்கும் முஸ்லிம்களின் சடலங்களைத் தகனம் செய்வதைப் பற்றிய சர்ச்சையும் ஆரம்பித்தது. அத்தோடு அச்சர்ச்சை 2021 ஆம் ஆண்டு முதல் இரண்டு மாதங்களிலும் தொடர்ந்து, இலங்கை அரசியலில் ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு இருந்தது.

2020 மார்ச் மாதம் 11 ஆம் திகதி, கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட முதலாவது இலங்கையர் அடையாளம்காணப்பட்டார். அதே மாதம் 27ஆம் திகதி, கொரோனாவால் மரணிப்போரின் சடலங்களை அடக்கும் செய்யவும் முடியும்; தகனம் செய்யவும் முடியும் என்று சுகாதார அமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டது.

உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டல்களிலும் தகனம் மற்றும் அடக்கம் ஆகிய இரண்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருந்தன.

ஆனால், மூன்று நாள்களுக்குப் பின்னர், மார்ச் 30 ஆம் திகதி ஒரு முஸ்லிம் நபர் கொவிட்-19 நோயால் உயிரிழந்த போது, சுற்றறிக்கையை அதிகாரிகள் புறக்கணித்து, அவரது சடலத்தைத் தகனம் செய்தனர். பின்னர் அன்றே கொவிட்-19 நோயால் மரணிப்போரின் சடலங்களை அடக்கம் செய்ய முடியாது; தகனம் செய்யவே வேண்டும் என்று சுற்றறிக்கையையும் வெளியிட்டனர்.

சுமார் 11 மாதங்களுக்குப் பின்னர், 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம், ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் உரையாற்றிய இஸ்லாமிய நாடுகளின் அமைப்பின் செயலாளர் நாயகம் யூசுப் அல் உதைமீன், “இந்தப் பலாத்கார தகன விவகாரத்தை, பாரதூரமாக கவனத்தில் கொள்வதாக கூறினார். அந்தக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணையிலும் இந்த விடயம் உள்ளடக்கப்படப் போவதை அறிந்த பின்னரே, அரசாங்கம் சடலங்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கியது.

இந்த விடயத்தில், அமைச்சர் சப்ரி மீது குற்றஞ்சுமத்துவது எவ்வகையிலும் நியாயமாகாது. ஏனெனில், அவர் அமைச்சராக இருந்தும் ஆரம்பம் முதல் முஸ்லிம்களின் சடலங்களைத் தகனம் செய்வதை பகிரங்கமாகவே எதிர்த்தார். நோயால் மரணித்த முதலாவது முஸ்லிம் நோயாளரின் சடலத்தைத் தகனம் செய்து மூன்று நாள்களில் ‘தெரண’ தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட நேர்காணலில், அவர் அரசாங்கத்தில் முடிவை விமர்சித்தார்.

ஆனால், அன்றைய அமைச்சரவையில் அனைவரும் கட்டாய தகனத்தை எதிர்த்ததாக அமைச்சர் கூறுவது உண்மையல்ல. அமைச்சர் பவித்ரா வன்னிஆரச்சி, கட்டாய தகனத்தை நியாயப்படுத்தி நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். அமைச்சர் மஹிந்தானந்த, ‘தெரண’ தெலைக்காட்சியில் தோன்றி அதனை நியாயப்படுத்தினார். அமைச்சர் கம்மன்பில் பல இடங்களில் அதனை நியாயப்படுத்தினார்.

அவர்கள், பேராசிரியர் சன்ன பெரேராவின் தலைமையிலான குழுவின் நிலைப்பாட்டை சுட்டிக் காட்டியே அவ்வாறு செய்தனர். ஆனால், சர்வதேச நெருக்குவாரம் அதிகரிக்கவே, அந்தக் குழுவின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லாமலேயே அரசாங்கம் கட்டாய தகனத்தை நிறுத்திக் கொண்டது. அதுவரை, அடக்கம் செய்வதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திய ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை ஆதரித்த பௌத்த பிக்குகளும், ஏனோ மௌனமாக இருந்துவிட்டனர்.

முஸ்லிம் விரோத பிரசாரத்தையும் பாவித்து, 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலிலும் 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் வெற்றி பெற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமனவினர் நாட்டை பொருளாதார ரீதியில் அழித்துவிட்டனர். பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கிய அரசாங்கம், மத்திய கிழக்கு நாடுகளை அணுகிய போதும் எதிர்ப்பார்த்த எந்த உதவியும் கிடைக்கவில்லை. அதற்கு ஒரு காரணம் கட்டாய தகனமேயாகும்.

2019ஆம் ஆண்டு தகுந்த ஆதாரமின்றி கட்டார் நாட்டு அமீரின் தலைமையில் இயங்கும் ஓர் அமைப்பை பயங்கரவாதத்துக்கு உதவுவதாகக் கூறி, இலங்கை அரசாங்கம் தடை செய்தது. அதுவும் இனவாதக் கண் கொண்டே மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர எண்ணெய் கொள்வனவு செய்ய வெளிநாட்டு செலாவணி இல்லாமல் கட்டாரிடம் உதவி கேட்க, கடந்த ஜூன் 30 ஆம் திகதி அந்நாட்டுக்குச் சென்றார். அங்கு என்ன நடந்ததோ தெரியாது. ஆனால், அங்கிருந்தே அமைச்சர் விஜேசேகர, கட்டார் அமைப்பு மீதான தடையை நீக்க அரசாங்கம் முடிவு செய்ததாக அறிவித்தார். நடந்ததை நாம் ஊகிககத் தான் வேண்டும்; ஆனால் எண்ணெய் கிடைக்கவில்லை.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை அடுத்து எழுந்த முஸ்லிம் விரோத பிரசாரத்துக்கு மத்தியில், சில மருத்துவர்களும் அரசியலவாதிகளும் ஊடகங்களும் குருநாகல் மருத்துவமனையில் கடமையாற்றிய மருத்துவர் ஷாபி ஷிஹாப்தீன் 4,000 சிங்களத் தாய்மார் மீது, அவர்களது விருப்பத்துக்கு மாறாக கருத்தடை முறைகளை மேற்கொண்டதாக பெரும் புரளியை பரப்பினர்.


அதனால், அவர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டார். அவரது பிள்ளைகளுக்கு, அவர்கள் சென்ற சிங்கள பாடசாலையிலிருந்து வெளியேற நேரிட்டது. அவர்களது குடும்பம் தலைமறைவாக வாழ வேண்டிய நிலை உருவாகியது.

பின்னர், இது அப்பட்டமான பொய் பிரசாரம் என்று தெரிய வந்தது. மருத்துவர் ஷாபிக்கு, அவரது சேவை இடைநிறுத்தப்பட்ட காலத்துக்கான சம்பள நிலுவையும் வழங்கப்பட்டது. இம்முறை அவரது மகள் பாத்திமா கபொத சாதாரண தர பரீட்சையில் 9 ஏக்களுடன் சித்தியடைந்தார். இதனை அடுத்து சிங்கள ஊடகங்களே மருத்துவர் ஷாபிக்கும் அவரது குடும்பத்துக்கும் இனவாதிகளால் இழைக்கப்பட்ட அநீதியைப் பற்றி குரல் எழுப்பின.

முஸ்லிம் விரோத பிரசாரத்தில் மிக மோசமாக ஈடுபட்ட இரண்டு தொலைக்காட்சி நிறுவனங்களில் மிகவும் மோசமாக செயற்பட்ட இரண்டு ஊடகவியலாளர்களும் அவ்வாறு அவர்களுக்காக பரிந்து பேசியமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கடிதங்கள்

### தொங்கும் வயர்கள் தொடுக்க உதவுங்கள்



தெல்தோட்டை, நூல்கந்தூர கொண்டகலை தோட்டத்தில் ஜேம்ஸ் டெய்லர், முதன்முதலில் தேயிலைச்செடியை நாட்டினார்.

கொண்டகலை பிரதேசத்துக்கு வருகைதரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள், அங்குள்ள அழகை இரசித்து வந்தாலும், அப்பிரதேசத்தில் எவ்விதமான அபிவிருத்திகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த நவீன காலத்திலும் 45 வருட காலமாக மின்சார வசதிகள் இல்லாமல் கொண்டகலை தோட்ட மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். தற்போது மண்ணெண்ணெய் இல்லாமலும் இரவு நேரங்களில் மெழுகுவர்த்தி ஏந்தி இருக்கின்றனர்,

மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்காக, ஒவ்வொரு வீடுகளிலும் மின்வயர்கள் பொருத்தப்பட்டுள்ளன. எனினும், மின்சாரத்தை பெற்றுக்கொடுக்க எவருமே முன்வருவதில்லை என்றும் அப்பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

வீடுகளைச் சுற்றி அழகான தேயிலை மலைகள் காணப்பட்டாலும் சூரிய ஒளியில் வெளிச்சத்தில் வாழ்ந்து, சூரியன் மறைந்த பின்னர் இருளில் வாழும் நிலைமையே ஏற்பட்டுள்ளது.

அலைபேசிகளுக்கு சார்ஜ் போட வேண்டும் என்றாலும் கூட, சில தூரத்தில் வசிக்கும் உறவினர்கள் வீடுகளுக்கு சென்று சார்ஜ் போட்டு வரவேண்டிய சூழ்நிலையில் வாழுகின்றோம் எனத் தெரிவிக்கும் அம்மக்கள், அதிகாரிகள் கவனத்தில் எடுத்து, தங்களுக்கு மின்சாரத்தை பெற்றுக்கொடுக்க வழிசமைக்க வேண்டுமென கோரிக்கைவிடுகின்றனர்.

– நவி



# இன்று கார்த்திகை தீபத்திருநாள்



வி.ரி சகாதேவராஜா

இந்துக்களின் கார்த்திகை தீபத் திருவிழா இன்று (07) புதன்கிழமை பௌர்ணமி தினத்தன்று கொண்டாடப்படுகின்றது. முருகப்பெருமானுக்குரிய இத்திருவிழா தொடர்பாக நாம் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காக இந்தக் கட்டுரை வரையப்படுகிறது.

> “கார்த்திகை மாதத்தில், கார்த்திகை விரதம் இருந்து, கார்த்திகை நட்சத்திரத்தில் ஈசனின் இடப்பாகம் பெற்ற அந்த நன்னாள் தான் கார்த்திகை தீபப் பெருநாளாகும்

## வரலாறு

கைலாயத்தில் ஈசன் ஏகாந்த தவத்தில் ஆழ்ந்திருந்த போது உமை, ஈசனின் பின்புறமாய் வந்து நின்று, விளையாட்டாய் அவர் இரு கண்களைப் பொத்தினாள். அதனால் உலகம் இருண்டது. ஈசனின் வலது, இடது கண்களான சந்திர, சூரியர்கள் களையிழந்தனர்.

நெற்றிக் கண்ணாகிய அக்னியும் அன்னையின் கைவிரல் பட்டுக் குளிர்ந்து போனது. அதனால் வேள்விகள் தடைப்பட்டன. யாகங்களும் பூஜைகளும் இல்லாமல் போயின. உலகத்தில் அருள் ஒழிந்தது; இருள் சூழ்ந்தது. உலகங்கள் இருண்டதால் முனிவர்களும், தேவர்களும் அஞ்சினர்; மதி மயங்கினர். கடமைகளை மறந்து முடங்கினர். அதனால் உலகம் தன்நிலையிலிருந்து தவறியது.

அடி அண்ணாமலையில் இருந்து, சினம் கொண்டார் ஈசன். உமை விளையாட்டாய் இந்தச் செயலைச் செய்திருந்தாலும் அது மிகப் பெரிய தவறு என்பதால், அன்னையைச் சபித்தார். அன்னை அஞ்சி நடுங்கி பிழை பொறுக்குமாறு வேண்ட, “தேவி, நீ விளையாட்டாகச் செய்தாலும் தவறு, தவறுதான். ஆதலால் நீ பூவுலகம் சென்று தவம் மேற்கொள்வாயாக! தக்க காலத்தில் யாம் வந்து உம்மை ஆட்கொள்வோம்” என்று கட்டளையிட்டார்.

அன்னையும் அவ்வாறே ஈசனின் கட்டளைப்படி பூவுலகிற்கு வந்து தவம் செய்ய ஆரம்பித்தாள். அவ்வாறு அன்னை தவம் செய்து ஈசனின் அருள் பெற்று, சாப நிவர்த்தியான தலம் தான் அண்ணாமலை. சாப நிவர்த்தி மட்டுமல்ல; ஈசனின் உடலில் சரி சமமாக இடப்பாகம் பெற்றாள்.

அன்னை கார்த்திகை மாதத்தில், கார்த்திகை விரதம் இருந்து, கார்த்திகை நட்சத்திரத்தில் ஈசனின் இடப்பாகம் பெற்ற அந்த நன்னாள் தான் கார்த்திகை தீபப் பெருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

## திருவண்ணாமலை சிறப்புகள்

1. திருவண்ணாமலையில் ஏற்றப்படும் கார்த்திகை தீபத்தை நேரில் பார்ப்பவர்களின் 21 தலைமுறைக்கு முக்தி கிடைக்கும்.

2. திருவண்ணாமலை தீபத்தன்று மலையை பார்த்து “நமசிவாய” சொன்னால், அந்த மந்திரத்தை 3 கோடி தடவை உச்சரித்த புண்ணியம் கிடைக்கும்.

3. திருவண்ணாமலை உச்சியில் தீபம் ஏற்றப்படும் போது, மலைக்கு உள் பகுதியிலும் பூஜைகள் நடக்கும் ஒலி கேட்டதாக ரமணர், சேஷாத்திரி சுவாமிகள் உள்பட பல அருளாளர்கள் கூறியுள்ளனர்.

4. திருவண்ணாமலையில் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்ட பிறகு, அதைப் பார்த்து வணங்கியபடி கிரிவலம் வந்தால், அந்த ஜோதியின் கதிர்கள் நம் உடம்பில் பட்டு ஆன்மசக்தி அதிகரிக்கும் என்பது ஐதீகம்.

5. தீபத் திருநாளில் 5 தடவை (மொத்தம் 70 கி.மீ தூரம்) கிரிவலம் வந்தால், அவர்கள் எவ்வளவு பெரிய பாவம் செய்திருந்தாலும், அவற்றில் இருந்து முழுமையான விமோசனம் கிடைக்கும் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

6. மலை மீது தீபம் ஏற்றப்படும் போது, “தீப மங்கள ஜோதி நமோ, நம” என்ற பாடலை பாடி வழிபட்டால் வாழ்வில் மங்களம் பெருகும்.

7. கார்த்திகைத் தீபத்துக்கு மூன்றாவது நாள் மலையை பஞ்ச மூர்த்திகளும் வலம் வருவது மிகச்சிறப்பாக நடைபெறும்.

8. திருவண்ணாமலை கார்த்திகை தீபத்தை காண சித்தர்கள் வருவார்கள் என்பது நம்பிக்கை. அப்படி வரும் சித்தர்கள் மலை உச்சியில் தீபம் ஏற்றும் கொப்பரை நெய்யில் சக்தி வாய்ந்த மூலிகைத் தைலங்களை சேர்த்து விடுவதாகச் சொல்கிறார்கள். இதனால் தீபத்தில் இருந்து வெளிப்படும் புகை, தீய சக்திகளை அழிப்பதாக கருதப்படுகிறது.

9. திருவண்ணாமலை சுமார் 2,668 அடி உயரம் கொண்டது. கீழ் இருந்து மலை உச்சி வரை செல்ல சுமார் 8 கி.மீ பாதை உள்ளது. மலை ஏற சுமார் 4 மணி நேரமாகும்.

10. திருவண்ணாமலை கார்த்திகை தீபத்துக்கு, சர்வாலய தீபம், கார்த்திகை விளக்கீடு, ஞானதீபம், சிவஜோதி, பரஞ்சுடர் என்றும் பெயர்கள் உண்டு.

11. கார்த்திகை தீபத்தன்று கிரிவலம் செல்பவர்களுக்கு ஆயிரம் அசுவமேத யாகம் செய்த பலன் கிடைக்கும்.

12. கார்த்திகை தீப தினத்தன்று, சிவலிங்கம் முன்பு நெய்தீபம் ஏற்றி வழிபாடு செய்தால், அவர்களது வாழ்க்கை பிரகாசமாக இருக்கும் என்பது நம்பிக்கை.

13. கார்த்திகை தீபம் ஏற்றப்படும் காட்சியை நேரில் பார்த்து வழிபடுபவர்களுக்கு சகல தானம் கொடுப்பதால் கிடைக்கும் புண்ணியங்கள் கிடைக்கும்.

14. கார்த்திகை மாதம், கார்த்திகை நட்சத்திரத்தில் திருவண்ணாமலை தலத்தில் ஏதாவது ஓர் இடத்தில் தீபம் ஏற்றி வழிபட்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

15. திருவண்ணாமலை மலை உச்சியில் தீபம் ஏற்ற பயன்படுத்தும் கொப்பரை சுமார் 2 ஆயிரம் லிற்றர் நெய் கொள்ளளவு கொண்டது.

16. மலை உச்சியில் ஏற்றப்படும் தீபத்தின் ஒளி, சுமார் 20 கிலோ மீற்றர் தொலைவுக்கு தெரியும்.

17. இந்தத் தீபம் சுமார் 11 நாள்கள் தொடர்ந்து எரியும்.

18. திருவண்ணாமலையில் கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு, பரணி தீபம், அண்ணாமலையார் தீபம், விஷ்ணு தீபம், நாட்டுக் கார்த்திகை தீபம், தோட்டக் கார்த்திகை தீபம் என 5 வகையான தீபங்கள் ஏற்றப்படும்.

19. சிவபெருமான் கார்த்திகை தீபநாளில் அக்னியில் நடனம் ஆடுவதாக ஐதீகம். இந்த நடனத்துக்கு ‘முக்தி நடனம்’ என்று பெயர்.

20. கார்த்திகை தீபம் தினத்தன்று ஆலயங்களில் சொக்கப்பனை கொளுத்துவார்கள். ஆனால் திருவண்ணாமலையில் சொக்கப்பனை கொளுத்தும் பழக்கம் இல்லை.

21. தீப நாளில் மலை மேல் தீபம் காண முடியாதவர்கள், தீப தரிசன நேரத்தில் அதை நினைத்தாலே, அதற்குரிய பலன்கள் கிடைக்கும்.

22. திருவண்ணாமலை கார்த்திகை தீபத்துக்கு நிகராக இதுவரை வந்த ஆலயத்திலும் ஜோதி வழிபாடு ஏற்பட்டதில்லை.

23. திருவண்ணாமலையில் ஏற்றப்படும் கார்த்திகை தீபம், அண்டசராசரங்களுக்கும் தீப விளக்காக கருதப்படுகிறது.

24. திருவண்ணாமலையில் ஏற்றப்படும் தீபம், உலகத்தை எல்லாம் இயக்குகின்ற பரம்பொருள் ஒன்றே என்பதை ‘இறைவன் ஒருவனே’ என்ற தத்துவத்தை உணர்த்துகிறது.

25. கார்த்திகை தீபத்தன்று அதிகாலை திருவண்ணாமலை கோவிலில் பரணி நட்சத்திர நேரத்தில் ஏற்றப்படும் பரணி தீபத்தை அங்குள்ள சொர்ண பைரவர் சன்னதியில் வைத்து விடுவார்கள். பிறகு மாலையில் அதைத்தான் மலை உச்சிக்கு எடுத்துச் சென்று தீபத்தை ஏற்றுவார்கள்.

26. திருவண்ணாமலை தீபத்தை காண கடந்த ஆண்டு சுமார் 20 லட்சம் பக்தர்கள் திரண்டனர்.

27. திருவண்ணாமலை மலை உச்சியில் தீபம் ஏற்றப்பட்டதும் வணங்கினால் பாவம் நீங்கி பிறவிப் பிணியை அறுக்க வல்லது என்பது ஐதீகமாகும்.

28. திருவண்ணாமலையில் தீபம் ஏற்றப்பட்டதும், “அண்ணாமலையாருக்கு அரோகரா” என்று பக்தர்கள் முழக்கமிடுவார்கள். இதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? “இந்த உடம்பு நான் என்னும் எண்ணத்தை அழித்து, மனதை ஆன்மாவில் அழித்து, உள்முகத்தால் அத்வைத ஆன்ம ஜோதியைக் காண்பது தான் இந்தத் தீப தரிசனம் ஆகும்”- இதை சொன்னவர் ரமண மகரிஷி.

29. பஞ்சபூத தலங்களுக்குள் இது நெருப்புக்குரிய தலம். இங்கு மலையே இறைவனின் சொரூபமாக உள்ளது.

குஜராத்

# மின்கம்பத்தில் கட்டிவைத்து அடித்த பொலிஸார்

### தேர்தலைப் புறக்கணித்த மக்கள்

மின்கம்பத்தில் கட்டிவைத்து பொலிஸார் அடித்ததால் 1,400க்கும் மேற்பட்ட மக்கள் தேர்தலைப் புறக்கணித்தனர்.



குஜராத் மாநிலத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்றது. இந்நிலையில், உன்ட்ஹிலா என்ற கிராமத்தை சேர்ந்த 1,400 மக்கள் குறித்த தேர்தலைப் புறக்கணித்தனர்.

கிராம மக்கள் தேர்தலில் வாக்களிக்காதமைக்கு கடந்த 2 மாதங்களுக்கு முன் நடந்த சம்பவமே முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது.

உன்ட்ஹிலா கிராமத்தில், ஒக்டோபர் மாதம் இந்து மத வழிபாட்டு தலமான துல்ஜா பவானி அம்மன் கோவிலில் ‘கர்பா‘ என்ற நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

இதன்போது அக்கோவில் அருகே இஸ்லாமியர்களின் மதராசா உள்ளதால் அந்நிகழ்ச்சியை நடத்துவதற்கு அக்கிராமத்தை சேர்ந்த இஸ்லாமியர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதன்போது மர்ம நபர்கள் சிலர் கர்பா நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் மீது தாக்குதல் நடத்தியதால் இரு தரப்புக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த பொலிஸார், இச்சம்பவத்துடன் தொடர்புடைய 10 பேரைக் கைது செய்து, அவர்களை அக்கிராமத்தின் மையப்பகுதிக்கு அழைத்து வந்து, அங்குள்ள மின் கம்பத்தில் கட்டி வைத்து கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இது குறித்த வீடியோக்கள் இணையத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன.

இந்நிலையில் இச்சம்பவத்தை கண்டித்து உன்ட்ஹிலா கிராமத்தில் உள்ள இஸ்லாமியர்கள் 1,400 பேர் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தலில் வாக்களிக்காமல் தேர்தலைப் புறக்கணித்தனர்.

இதனையடுத்து சுமார் 3 ,700 பேரை மொத்த வாக்காளர்களாகக் கொண்ட இக் கிராமத்தில் 43 சதவீத வாக்குகளே பதிவாகியுள்ளதாக தேர்தல் அதிகாரி தெரித்துள்ளார்.

சென்னை

# 28,000 சத்துணவு மையங்களை மூடத் திட்டம்



28,000 சத்துணவு மையங்களை மூட, தமிழக அரசு திட்டமிட்டு உள்ளதாகப் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், “தமிழ் நாட்டில் சத்துணவுத் திட்ட சீரமைப்பு என்ற பெயரில் சுமார் 28,000 சத்துணவு மையங்களை மூடுவதற்கு அரசு திட்டமிட்டு இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

சத்துணவு திட்டத்தை வலுப்படுத்த வேண்டிய தேவை நாளுக்குநாள் அதிகரித்து வரும் நிலையில், சத்துணவு மையங்களை மூடுவதோ, ஒருங்கிணைப்பதோ சத்துணவு திட்டத்தை வலுவிழக்கவே செய்யும்.

இன்றைய நிலையில், தமிழ்நாட்டில் 43,190 பாடசாலைகளில் சத்துணவு மையங்கள் உள்ளன. அவற்றில் சுமார் 1.29 இலட்சம் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். புதிய திட்டம் செயற்பாட்டுக்கு வந்தால் சுமார் 28,000 சத்துணவு மையங்களை மூட வேண்டிய நிலை உருவாகும்.

அதனால் சுமார் 85,000 பணியிடங்கள் இரத்து செய்யப்படும். இது மோசமான பணியாளர் விரோத நடவடிக்கையாகவே அமையும்.

மற்றொருபுறம், தமிழகத்தில் 1,545 ஆரம்பப் பாடசாலைகளில் அண்மையில் தொடங்கப்பட்டுள்ள காலை உணவு திட்டம் பெரும் வரவேற்பை பெற்றிருக்கிறது.

அதனால், காலை உணவு திட்டத்தை அனைத்து பாடசாலைக்கும், அந்தந்த பாடசாலைகளில் சமைத்து வழங்கும் வகையில் விரிவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய ஆக்கப்பூர்வமான பணிகளை மேற்கொள்ள வேண்டிய சமூக நலத்துறை, அதை விடுத்து சத்துணவு மையங்களை மூடுவதற்கான திட்டங்களை வகுப்பது தமிழக அரசுக்கு பெருமை சேர்க்காது எனத் தெரிவித்துள்ளார்.

புது டெல்லி

# தமிழகத்திற்கு 8 ஆம் திகதி எச்சரிக்கை



தமிழகத்தில் கடந்த சில நாள்களாக வடகிழக்கு பருவமழை மீண்டும் உச்சம் அடைந்து வருகின்றது.

இதன் காரணமாக தமிழகத்தில் எதிர்வரும் நாள்களில் அதிகளவில் மழைபெய்யும் எனவும், குறிப்பாக வரும் 8ஆம் திகதி கனமழை பெய்யக்கூடும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்திய வானிலை ஆய்வு மையம் தமிழகத்திற்கு செம்மஞ்சள் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒடிசா

# 4 வருடங்களின் பின்னர் கதவை தட்டிய 500 ரூபாய்




நபர் ஒருவர் தனது சகோதரிக்கு அனுப்பிய காசுக்கட்டளை நான்கு வருடங்கள் கழித்து அவரைச் சென்றடைந்த விநோத சம்பவம் ஒடிசாவில் இடம்பெற்றுள்ளது.

சுமித்ரா என்ற பெண் ஒடிசாவில் தனது குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். இவருக்கு பிரமோத் குமார் என்ற சகோதரர் உள்ளார்.

ரூர்கேலாவில் வசித்துவரும் பிரமோத், 2018 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி, சாவித்திரி விரத பூஜைக்காக தனது சகோதரிக்கு 500 ரூபாயைக் காசுக்கட்டளை மூலம் அனுப்பியுள்ளார்.


ஆனால், அத்தொகையானது சுமித்ராவை உரியநேரத்தில் வந்தடையவில்லை.

இந்நிலையில், அண்மையில் திடீரென சகோதரனிடம் இருந்து 500 ரூபாய் வந்துள்ளதால் குழப்பமடைந்த சுமித்ரா, இது குறித்து சகோதரரிடம் கேட்டுள்ளார்.

இதன்போதே அவர் 4 வருடங்களுக்கு முன்னர் குறித்த பணத்தை அனுப்பியுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இச்சம்பவம் குறித்து கேள்விப்பட்ட அப்பகுதி அஞ்சல் துறை அதிகாரி, உடனடியாக இது குறித்து விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளார்.

# “உதயநிதியை வீழ்த்துவேன்” –சவுக்கு சங்கர் உறுதி





சமூக வலைத்தளங்களில் அரசியல் கருத்துகளைப் பேசி பிரபலமானவர் ‘சவுக்கு சங்கர்’.

சமீபத்தில் நீதித்துறைக் குறித்து இவர் பேசிய விடயங்கள் சர்ச்சையை ஏற்படுத்தியதையடுத்து, அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுக்கப்பட்டு 6 மாத சிறை தண்டனை வழங்கப்பட்டது.

இதன்காரணமாக ‘சவுக்கு சங்கர்’ சுமார் இரண்டு மாத காலம் சிறையில் இருந்தார்.

எனினும் உச்சநீதிமன்றத்தில் அவர் மீது தொடரப்பட்ட வழக்கு மேல்முறையீடு செய்யப்பட்ட நிலையில், நிபந்தனைகளுடன் தற்போது பிணையில் வெளியே வந்துள்ளார்.

இந்நிலையில், ‘சவுக்கு சங்கர்’ தனது சிறை அனுபவம் குறித்து அண்மையில் பிரபல ஊடகமொன்றுக்கு செவ்வியை வழங்கியிருந்தார்.

இதன்போது, “திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதியை, நீங்கள் எதிர்த்து நிற்பதால் உங்களுக்கு என்ன லாபம்” என்ற கேள்வி கேட்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர், “உதயநிதியை எதிர்த்து போட்டியிட்டு, அவரின் தொகுதியிலே எம்.எல்.ஏ ஆக வந்து, மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பது தான் எனது ஆசை” எனத் தெரிவித்துள்ளார்.

‘சவுக்கு சங்கர்’ சிறையில் இருந்தபோது, அவருக்கு ஆதரவாக நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் குரல் கொடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரான்

# 500க்கும் மேற்பட்டோருக்கு தூக்குத் தண்டனை

ஈரானில் அண்மையில் ஹிஜாப்பினை முறையாக அணியவில்லை எனக் கூறி கைது செய்யப்பட்ட மஹ்சா அமினி என்ற இளம்பெண் பொலிஸார் தாக்கியதில் உயிரிழந்தார்.

இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆயிரக்கணக்கானோர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் இப்போராட்டங்களின் போது பயங்கரவாதத்தைத் தூண்டும் விதமாக செயற்பட்டதாகக் கூறி, பலருக்கு ஈரான் நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஈரானில் இவ்வாண்டில் (2022) மாத்திரம் சுமார் 500 க்கும் மேற்பட்டவர்கள் தூக்கிலிடப்பட்டுள்ளனர் எனவும், கடந்த 5 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது அதிகபட்ச எண்ணிக்கை எனவும், முன்னதாக 2021 ஆம் ஆண்டு 333 பேர் தூக்கிலிடப்பட்டனர் எனவும் மனித உரிமைகள் அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நியாயமான விசாரணை இல்லாமல் இந்நபர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக குறித்த மனித உரிமைகள் அமைப்பின் இயக்குநர் மஹ்மூத் அமிரி-மொகத்தம் கூறினார். மேலும் மரணதண்டனைகள் மூலம் சமூகத்தில் அச்சத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காகவே ஈரான் அரசு இவ்வாறு செயற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தென் ஆபிரிக்கா

# வழிபாடு நடத்திய 14 பேர் உயிரிழப்பு

தென்ஆபிரிக்காவின் மிகப்பெரிய நகரான ஜோகன்னஸ்பர்க்கில், 'ஜுஸ்கி' என்ற மிகப்பெரிய ஆறு உள்ளது.


உள்ளூரை சேர்ந்த கிறிஸ்தவர்கள் குறித்த ஆற்றின் கரையில் ஞானஸ்நானம் உள்ளிட்ட மதச் சடங்குகளை நடத்துவது வழக்கம்.

இந்நிலையில் அண்மையில் ஜுஸ்கி ஆற்றங்கரையில் ஞானஸ்நான நிகழ்வு நடைபெற்றுள்ளது. இதனையொட்டி ஏராளமான கிறிஸ்தவர்கள் அங்கு வருகை தந்துள்ளனர்.

அப்போது திடீரென ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதில் ஆற்றங்கரையில் நின்றிருந்த பலர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்.


இதனையடுத்து மீட்பு குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் இச்சம்பவத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஜப்பான்

# கோழிகளுக்கு எமனாகும் ஜப்பான்



ஜப்பானின் ஆய்ச்சி மாகாணத்தில் உள்ள கோழிப்பண்ணையில் வழக்கத்துக்கு மாறாக அதிக எண்ணிக்கையிலான கோழிகள் உயிரிழந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து உயிரிழந்த கோழிகளைப் பரிசோதித்ததில் அவற்றில் பெரும்பாலானவை, பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

குறித்த மாகாணத்தில் கடந்த 11 ஆண்டுகளுக்கு பின்னர் முதன் முறையாக பறவை காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் பறவை காய்ச்சல் மேலும் பரவுவதைத் தடுக்கும் விதமாக மாகாணம் முழுவதிலும் சுமார் 3, 10,000 கோழிகளை அழிக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே போல் கோஹிமா மாகாணத்திலும் பறவை காய்ச்சல் காரணமாக 34,000 கோழிகள் அழிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பானில் ஒக்டோபர் மாத இறுதியிலிருந்து இதுவரை 33 லட்சம் கோழிகள் கொல்லப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

தென் ஆபிரிக்கா

# "வெடிகுண்டு என பெயர் சூட்டுங்கள்"

## பெற்றோர்களுக்கு வடகொரியா உத்தரவு

பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு 'வெடிகுண்டு', 'செயற்கைக்கோள்', 'விஸ்வாசம்' போன்ற பெயர்களைச் சூட்டுமாறு வடகொரிய அரசு உத்தரவிட்டுள்ளது.

வடகொரிய மக்களிடையே நாட்டுப் பற்றை வளர்க்கும் விதமாகவே வடகொரிய அரசு இத்தகையை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மேலும் அரசின் இவ் உத்தரவை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அவ்வாறு கடைபிடிக்காதவர்களுக்கு கடுமையான அபராதம் விதிக்கப்படும் எனவும் வடகொரிய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





கொலம்பியா

# 34 பேரின் உயிரை பறித்த நிலச்சரிவு

தென் அமெரிக்கா நாடான கொலம்பியாவில் உள்ள பியூப்லோ ரிகோ பகுதியில் கடந்த சில நாள்களாக கன மழை பெய்து வருகின்றது.

இதன் காரணமாக அப்பகுதியில் உள்ள நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிவருகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் (05) குறித்த பகுதியில் திடீரென பாரிய நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்நிலச்சரிவில் சிக்கி இதுவரை 3 சிறுவர்கள் உட்பட 34 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், பலர் காணாமற் போயுள்ளனர் எனவும், அவர்களை மீட்கும் பணியில் மீட்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர் எனவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.





உலகக் கிண்ணம்

# காலிறுதியில் பிரேஸில், குரோஷியா

கட்டாரில் நடைபெற்றுவரும் கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு பிரேஸில், குரோஷியா ஆகியன தகுதி பெற்றுள்ளன.

நேற்று அதிகாலை நடைபெற்ற தென்கொரியாவுடனான இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப் போட்டியில் 4-1 என்ற கோல் கணக்கில் வென்றே காலிறுதிப் போட்டிக்கு பிரேஸில் தகுதி பெற்றது. பிரேஸில் சார்பாக, வின்ஷியஸ் ஜூனியர், நெய்மர், றிஷலிஷன், லூகாஸ் பக்கெட்டா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். தென்கொரியா சார்பாகப் பெறப்பட்ட கோலை பைக் செயுங்-ஹோ பெற்றிருந்தார்.

இதேவேளை, நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஜப்பானுடனான இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப் போட்டியில் பெனால்டியில் வென்றே காலிறுதிப் போட்டிக்கு குரோஷியா தகுதி பெற்றிருந்தது.

போட்டியின் வழமையான நேரத்தில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, மேலதிக நேர முடிவிலும் அதே கோல் கணக்கிலேயே இருந்த நிலையில் 3-1 என்ற ரீதியில் பெனால்டியிலேயே குரோஷியா வென்றிருந்தது. இதில், ஜப்பானின் மூன்று வீரர்களின் உதைகளை குரோஷிய கோல் காப்பாளர் தடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எல்.பி.எல்:

# கிளாடியேட்டர்ஸை வென்ற ஜ:.ப்னா கிங்ஸ்



இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான லங்கா பிறீமியர் லீக் (எல்.பி.எல்) ஆனது நேற்று (06) ஆரம்பித்த நிலையில், ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற ஆரம்பப் போட்டியில் கோல் கிளாடியேட்டர்ஸை நடப்புச் சம்பியன்களான ஜஃப்னா கிங்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற கிளாடியேட்டர்ஸின் அணித்தலைவர் குசல் மென்டிஸ், கிங்ஸை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ், 19.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 137 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், டுனித் வெல்லலாகே 30 (20), ஷொய்ப் மலிக் 30 (27), தனஞ்சய டி சில்வா 29 (19) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், இமாட் வஸீம் 4-0-22-2, வஹாப் றியாஸ் 4-0-23-2, நுவான் பிரதீப் 4-0-23-2, இஃப்திஹார் அஹ்மட் 1-0-8-2, நுவான் துஷார 3.5-0-31-2 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 138 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கிளாடியேட்டர்ஸ், 20 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 113 ஓட்டங்களையே பெற்று 24 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், குசல் மென்டிஸ் 51 (43) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், பினுர பெர்ணாண்டோ 3-1-22-3, விஜயகாந்த் வியாஸ்காந்த் 4-0-20-2, டுனித் வெல்லலாகே 3-0-14-1, ஜேம்ஸ் புல்லர் 4-0-19-1, மகேஷ் தீக்ஷன 4-0-24-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர். இப்போட்டியின் நாயகனாக டுனித் வெல்லலாகே தெரிவானார்.

இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கிங்ஸை தம்புள்ள ஜையன்ட்ஸ் எதிர்கொள்ளவுள்ளதுடன், இரவு 7.30 மணிக்கு கிளாடியேட்டர்ஸை கண்டி வொரியர்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

புத்தளம் மாவட்ட செயலாளர் சவால் கிண்ண கரப்பந்தாட்டத் தொடர்

# சம்பியனாகிய கற்பிட்டி, மாதம்பை பிரதேச செயலக அணிகள்



முஹம்மது முஸப்பிர்

புத்தளம் மாவட்டச் செயலகம் ஏற்பாடு செய்த மாவட்டச் செயலாளர் சவால் கிண்ண கரப்பந்தாட்டத் தொடரில், ஆண்களில் கற்பிட்டி பிரதேச செயலக அணியும், பெண்களில் மாதம்பை பிரதேச செயலக அணியும் சம்பியனாகின.

புத்தளம் நகர சபை மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இத்தொடரில் புத்தளம் மாவட்டத்திலுள்ள 16 பிரதேச செயலகங்களின் ஆண், பெண்கள் அணிகளுடன் புத்தளம் மாவட்டச் செயலக அணியும் கலந்து கொண்டது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் வண்ணாத்திவில்லு அணியை வென்று மாதம்பை சம்பியனானதுடன், ஆண்களின் இறுதிப் போட்டியில் முந்தலை வென்று கற்பிட்டி சம்பியனானது.



தெற்காசிய கராத்தே போட்டியில்

# கிழக்குக்கு பெருமை சேர்த்த துஷ்யந்தனுக்கு கௌரவம்

வா. கிருஸ்ணா



வடக்கு, கிழக்கின் வரலாற்றில் முதன்முறையாக தெற்காசிய குமித்தே கராத்தே போட்டியில் வெள்ளப் பதக்கத்தைப் பெற்று இலங்கைக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் பெருமை சேர்ந்த மட்டக்களப்பு ஜேகோமோ கழகத்தின் வீரர் ஆர். துஷ்யந்தனுக்கு, மட்டக்களப்பு புகையிரத நிலையத்தில் வைத்து அண்மையில் வரவேற்பளிக்கப்பட்டது.

இதன்போது மாலை அணிவிக்கப்பட்டு பொன்னாடைகள் போர்த்தப்பட்டு துஷ்யந்தனுக்கும், அவருக்கு பயிற்சிகள் வழங்கிய மட்டக்களப்பு ஜேகோமோ கழகத்தின் பயிற்றுவிப்பாளர் எச். ஆர். சில்வா, பயிற்றுவிப்பாளர் என். கௌசிகன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

திறமையான வீரர்கள் உள்ளபோதிலும் அவர்களுக்கு பயிற்சிகளைப்பெறுவதற்கு போதிய உபகரணங்கள் இல்லையென இங்கு என். கௌசிகன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் வரவு செலவுத் திட்டம் ஊடாக வீரர்களின் பயிற்சிக்குத் தேவையான உபகரணங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கையெடுக்கப்படும் என மட்டக்களப்பு மாநகர சபைத் தலைவர் தி. சரவணபவன் குறிப்பிட்டார். இச்சாதனைப் பயணத்துக்கு முழுமையான ஒத்தாசையை ஜேகோமோ கழகத்தின் பிரதம போதனாசிரியர் சென்சி முருகேந்திரன் வழங்கியிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 07 டிசெம்பர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.